Registered at the G. P. O.as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன் 389 தபாற் பெட்டி என். 48

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 23 ஆம் நாள் துல்கஃதா பிறை21 (5-4-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 55

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

யாழ்ப்பாணத்தில்

# சமசமாஜ வாலிபர்கள் நடைபவனி

## என்.எம்., கொல்வின், விவியன், சமரக்கொடி, லெஸ்லி, கலந்தனர்

### வழிநெடுகிலும் செங்கொடிகள் சகிதம் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

காங்கேசன்துறையிலிருந்து சமசமாஜக் கட்சித் தலைவர்கள் தலைமையில் வடபகுதியிலுள்ள சமசமாஜ வாலிபர்களும் பெண்களும் செங்கொடிகளுடன் அணிவகுத்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். சமசமாஜ வாலிப சம்மேளனத்தினரின் நடை பவனியில் தென் இலங்கையிலிருந்து வந்த சமசமாஜ வாலிபர் முன்னணியைச் சேர்ந்த 50 பிரதிநிதிகள் உட்பட சுமார் 500 இளைஞர்களும் பெண்களும் கலந்துகொண்டனர். கால்நடை பவனிக்கு, வழிநெடுகிலும் செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பாதைகளில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

'கூட்டாட்சியில் சேரமாட்டோம்', 'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வீழ்க', 'சமஷ்டிப் பாதை பிரச்சினை தீரா', 'சமதர்மமே வழியை வகுக்கும்' ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் சிவப்பு நிற வெளிச்சக் கூடுகள் தாங்கிய நடைபவனியினர் சமதர்மப் பாடல்களைப் பாடிக்கொண்டு வந்தனர்.

டாக்டர் என்.எம். பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, எட்மன்ட் சமரக்கொடி, திரு. லெஸ்லி குணவர்த்தன, இரத்தினபுரி எம்.பி. திரு தனபாலவீரசேகரா, திரு ரெஜி மெண்டிஸ், திரு. வி. காராளசிங்கம், முன்னாள் செனட்டர் பொ. நாகலிங்கம், திருமதி விவியன் குணவர்த்தன முதலான தலைவர்கள் இந்த நடைபவனிக்குத் தலைமை தாங்கினர்.

காங்கேசன் துறை வெளிச்சவீட்டு மைதானத்திலிருந்து நேற்றுமாலை நான்கு மணிக்கு நடைபவனி ஆரம்பித்தது. செஞ்சட்டை அணிந்த வாலிபர்கள், பெண்களுட்பட கிரமமாக அணி வகுத்து வந்தனர்.

பாதைகளில் செங்கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன. பூரண கும்பங்கள் பல இடங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. நடைபவனியினருக்கு பல இடங்களில் குளிர்பானங்கள், தேநீர் வழங்கப்பட்டன.

இன்று காலை நகர மண்டபத்தில் ஆரம்பமாகும் சமசமாஜ வாலிப மகாநாட்டில் தமது அரசியல் நிலைபற்றி தலைவர்கள் அத்தனை பேரும் விளக்கம் கொடுப்பார்கள் எனத் தெரிகிறது. மாலையில் யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் சமசமாஜ வாலிப சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பகிரங்கக் கூட்டத்திலும் அகில இலங்கை சௌக்கிய சேவை இலாகா தொழிலாளர்களினால் நகர மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பகிரங்கக் கூட்டத்திலும் இத்தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

# குருஷ்சேவின் எச்சரிக்கை!

புடாபெஸ்ட், ஏப். 4

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சீர்குலைக்கும் சீனாவின் முயற்சிகளை முறியடிக்க உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்ட் நாடுகள் தயாராகவிருக்க வேண்டுமென்று ரஷ்யப்பிரதமர் குருஷ்சேவ் அறிவித்துள்ளார்.

தற்பொழுது ஹங்கேரியில் சுற்றுப் பிரயாணம் செய்யும் திரு. குருஷ்சேவ், நேற்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் தான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி மீது சீனகம்யூனிஸ்ட்கட்சிசுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப்பதிலளிக்குமுகமாக, ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிப்பத்திரிகையான "பிராவ்டா" 30,000 வார்த்தைகளைக் கொண்ட நான்குபக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கருத்து வேறுபாடுகளைக் களைந்தெறியும் பொருட்டு உலக கம்யூனிஸ்ட்கட்சிகளின் கூட்டமொன்று விரைவில் கூட்டப்பட வேண்டுமென்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி யோசனை தெரிவித்துள்ளது. சீனாவின் அபாண்டமான குற்றச் சாட்டுகள், குறிப்பாக ரஷ்ய கம்யூனிஸ்ட்கட்சியையும் பொதுவாக சோவியத்மக்களையும் அவமதித்துள்ளன என்றும் அது தெரிவித்துள்ளது.

சோவியத்-சீன கம்யூனிஸ்ட் கட்சிகளின் "மோதல்" இப்பொழுது அதிகரித்திருப்பதாக பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

## ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவு

கொழும்பு, சனி

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் வெளியாகும் என்று பரீட்சை இலாகா அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை முடிவுகள் ஜூன் மாதத்தில் அல்லது ஜூலை மாத ஆரம்பத்தில் வெளியாகும்.

# நீச்சல் வீரர்கள் இன்று மாலை கரை சேர்வார்கள்

## வல்வெட்டித்துறையில் வரவேற்புக்கான ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தென்னிந்தியாவிலுள்ள கோடிக்கரையிலிருந்து பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட மூவரும் இன்று மாலைக்குப் பின்னர் வல்வெட்டித்துறைக்கு வந்து சேரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக்காலை சரியாக ஏழு மணிக்குகோடிக்கரையிலிருந்து பாக்கு நீரிணையை நீந்தும் முயற்சியில் திருமதி அசிலின் டயஸ், திருவாளர்கள் மொறிஸ் மார்க், ஜோர்ஜ் வன்னியப்பா ஆகிய மூவரும் ஈடுபட்டனர். கோடிக்கரையில் பல அன்பர்கள் ஆசி வழங்கி அனுப்பி வைத்தனர்.

கடல்அமைதியாக இருப்பதாகவும், நீச்சல் முயற்சியில் மூவரும் ஆரம்பத்தில் உற்சாகத்துடன் காணப்பட்டதாகவும் இங்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மூவரும் இன்று மாலை வல்வெட்டித்துறை துறைமுகக் கரையை வந்து சேர்வார்களென நம்பப்படுகிறது. அவர்களை இங்கு வரவேற்பதற்

(10-ம் பக்கம் பார்க்க)

## மலன்கோவ் வெளியேற்றம்

மாஸ்கோ, ஏப். 4

முன்னாள் சோவியத் பிரதமர் திரு. மலன்கோவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. மலன்கோவ் உட்பட மூவர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'சமீபகாலத்தில் பொதுத் தேர்தல் இல்லை'

கொழும்பு, சனி

சமீப காலத்தில் பொதுத் தேர்தலொன்று நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்று கல்வி உதவி மந்திரியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டுக்காரியதரிசியுமான திரு. டி. பி. தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

"இந்த வருடத்தின் சமீப காலத்தில் ஒரு பொதுத்தேர்தல் நடைபெறமாட்டாது என்று பிரதமமந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெளிவுபடுத்திக் கூறியுள்ளார் என்றும் திரு. தென்னக்கூன் தெரிவித்தார்.

"இடதுசாரிகள் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, இந்த அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தை வெற்றிகரமாக முடித்தே தீரும். ஆகையினால் சமீப காலத்தில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெற வேண்டிய அவசியமில்லை" என்றும் திரு. தென்னக்கூன் கூறினார்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிருர்

[5-4-1964 தொடக்கம் 11-4-1964 வரை]

**மேடம்**

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் உங்களுக்கு மனதிற்கு ரம்மியமான சூழ்நிலை உண்டாவதை உணர்வீர்கள். நீங்கள் எதிர்த்து சொல்ல முடியாத ஒருவர் உங்களைப் பாதிக்கக் கூடிய செயலில் இறங்குவார். வருகிற சனிக்கிழமையளவில் ஏதாவதொரு மாற்றத்திற்கு அடிகோலும் திட்டத்தைப்பற்றி ஆலோசிப்பீர்கள். இந்த மாற்றம் ஒன்றில் உங்கள் தொழில் சம்பந்தப்பட்டதாக இருக்கும் அல்லது வீடுசம்பந்தப்பட்டதாக இருக்கும். மனதில் வீண் சஞ்சலம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

**இடபம்**

(கார்த்திகை 2,3,4-ம் பாதங்களிலும் ரோகிணி,மிருகசீரிடம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) வாரஆரம்பத்தில் உங்கள் குடும்பத்துக்குள் பலதொல்லைகள் ஏற்பட்டாலும் போகப் போக சந்தோஷமும் உற்சாகமான வாழ்க்கையும் ஏற்படும். வருகிற சனிக்கிழமையளவில் உங்களுக்கு நன்மையையும் உற்சாகத்தையும் தரத்தக்க பிரயாணம் ஒன்று ஏற்படும். உங்களுடன் வேலைபார்ப்பவர்களிடையேயும் குடும்பத்தினரிடையேயும் நல்லெண்ணத்தையும் சந்தோஷத்தையும் இந்த வார இறுதிக்குள் நிலைநாட்டுவீர்கள். சனிக்கிழமை உங்களுக்கு அனுகூலமானநாள்.

**மிதுனம்**

(மிருகசீரிடம் 3,4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) வார ஆரம்பத்தில் குடும்பத்தில் சச்சரவுகளுக்கு இடமுண்டு. பொருள் விஷயங்களில் உங்களுடைய குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் வித்தியாசமான அபிப்பிராயங்களிருந்துகொண்டிருக்கும். செலவினங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிராது. அனுவசியமான டாம்பீகச் செலவுகள் ஏற்படுவதை தடுத்துக் கொள்ளமுடியாத சூழ்நிலைகள் ஏற்படும். செவ்வாய்க் கிழமையளவில் பணவருவாய்க்கு இடமுண்டு. ஆனல் அவ்வளவும் கையை விட்டுப் போய்விடும்.

**கடகம்**

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்குள்ளிருக்கும் சந்தேகங்களை வெளிக்காட்டாமலிருப்பது நல்லது. வீண் மனச் சந்தேகங்கள் எழுந்து மனதை வாட்டிக்கொண்டிருக்கும். வாரமுடிவில் அதெல்லாம் வீண்சந்தேகம் என்பதைஉணர்வீர்கள். அதுவரை மனதை வீணுக அலட்டிக்கொண்டிருப்பீர்கள். பலவிதமான அதிர்ச்சி தரும் சம்பவங்கள் இந்த வாரத்தில் நிகழும். மனத் தைரியத்துடன் சமாளித்துக் கொள்ளவேண்டும். எந்தக் காரியத்தையும் சரியாகச் செய்ய அவகாசமும் சந்தர்ப்பமும் இடம் தராது.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) மனதில் சந்தோஷமில்லாவிட்டாலும் இந்த வாரம் பல காரியங்கள் அநுகூலமாகும். அனேகமாக புதன்கிழமை உங்களுக்கு மிகவும் முக்கியமான நாளாகஅமையும். அன்று சாப்பிடக்கூட நேரமில்லாமல் திரியநேரிடும். பணவிவகாரங்களில் பொறுப்பேற்க இந்த வாரம் அநுகூலமாயிருக்கும். பணவருவாய் இந்த வாரத்தில் சமாராக இருந்தாலும் கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் தீரா. நெருப்புடன் புழங்கும் தொழிலாளிகள் இந்தவாரத்தில் மிகவும் அவதானமாக இருக்கவும்.

**கன்னி**

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் வீண் அலைச்சலுக்கும் பொருட் செலவுக்கும் குறைவிராது. அனுவசியமான பிரயாணங்களும் செலவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சிலர் உங்களை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு தாங்கள் பணம்சம்பாதிக்கப் பார்ப்பார்கள். நீங்கள் மனம் புழுங்கினலும் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடந்தேதீரவேண்டும். உங்கள் உறவினர் ஒருவரின் வருகை உங்களுக்கு ஆறுதலை ஏற்படுத்தும். செலவினங்கள் ஓரளவுக்கு கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கும்.

**துலாம்**

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு). அவமானமடையக்கூடியசிலசம்பவங்கள் இந்த வாரத்தில் ஏற்படக் கூடும். நீங்கள் சொல்லாத சில வார்த்தைகளை நீங்கள் சொன்னதாகக் கற்பனைசெய்து கொண்டு உங்களுடன் வாக்கு வாதத்திற்கு வருவார்கள். எந்தவிதமான வாக்குறுதிகளையும் நம்பி மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடக் கூடாது. நீங்கள் நம்பியிருக்கும் நண்பர்கள் சமயத்தில் உங்கள் காலைவாரிவிடுவார்கள். உங்கள் மனைவி அல்லது சிநேகிதர் வழி உறவினர்கள் உங்கள் உதவியைப்பெறுவதற்காக நச்சரித்துக் கொண்டிருப்பார்கள்.

**விருச்சிகம்**

(விசாகம் 4-ம் பாதத்திலும் அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) நீங்கள் கைவசம் வைத்திருந்த பணமெல்லாம் உங்களை அறியாமலே கரைந்துபோகும். உங்கள் சம்பாத்தியமெல்லாம் எப்படி செலவாகிறதென்று உங்களுக்கே புலப்படாது. உருண்டோடும் பணத்தைக் கட்டுப்படுத்த உங்களிடம்சக்தியில்லை. அனுவசியமான பகையும் இந்த வாரத்தில் ஏற்படக்கூடும். நீங்கள் எவ்வளவு நேர்மையாக நடந்தாலும் மற்றவர்கள் உங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள். நீங்கள் எதிர்பாராத நண்பர் ஒருவர் வார இறுதியில் வந்து சேருவார். அவருடைய வருகை நன்மையைத் தரும்.

**தனுசு**

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு ஏழரைச்சனி கழிந்திருப்பதினல் பலவிதமான ஆறுதலையும் எதிர்பார்க்கலாம். பெரும் நன்மைகள் ஏற்படாவிட்டாலும் பலவழியில் ஆறுதலுக்கு இடமுண்டு. வாழ்க்கையில் சில மாறுதல்களுக்கு இந்த வாரத்தில் இடமுண்டு. மனதில் ஏற்பட்ட பல கவலைகள் சிறுகச் சிறுக விலகிவரும். பல நாட்களாக பீடித்திருந்த பீடைகள் உங்களை விட்டகலுவதை இந்த வாரத்தில் உணருவீர்கள். விவாகமாகாதவர்களுக்கு இந்த வாரத்தில் விவாக அநுகூலமான பேச்சுக்கள் நடைபெறும்.

**மகரம்**

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1,2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) பொதுவாக இந்த வாரத்தில் உங்களுக்கு குறிப்பிடத்தக்க பலன்கள் சொல்ல முடியாது. வருவாய்க்கு தகுந்த செலவு இருந்து கொண்டேயிருக்கும். நிலபுலன்கள் உள்ளவர்களுக்கு இந்தவாரத்தில் வருவாயுண்டு. எந்த விஷயத்தையும் ஆராய்ந்து செய்வது நல்லது. வயதுக்கு மேம்பட்ட பெரியவர்களின் உதவி இந்த வாரத்தில் ஏற்படும். பலகாலமாக இருந்து வந்த கொடுக்கல் வாங்கல் பிணக்கொன்று இந்த வாரத்தில் தீரும். வெள்ளிக்கிழமை தொழில் விருத்திக்கு ஏற்ற நாள்.

**கும்பம்**

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) மனதில் ஏற்படும் ஆசைகளை அடக்கி நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்த வாரத்தில் ஏற்படும். நீங்கள் நினைத்ததற்கு மாருக காரியங்கள் நடைபெறும். விவாககாரியங்களில் ஈடுபடும் இந்த இராசிக்காரர்களுக்கு பலவிதமான முன்னேற்றத் தடைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். பெண் உறவினர் ஒருவர் எந்தக் காரியத்தையும் தாமதப் படுத்திக் கொண்டிருப்பார். உங்களுடைய உற்சாகமான போக்கால் எந்தக் காரியத்தையும் சாதிப்பீர்கள்.

**மீனம்**

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவார ஆரம்பத்திலேயே பலவிதமான குழப்பங்கள் குடும்பத்தில் ஏற்படக்கூடும். எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்யமுடியாமல் தடுமாறுவீர்கள். நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்களுடைய சொந்த விஷயங்களில் உறவினருடைய தலையீடு இருக்கும். இதனல் நீங்கள் பொறுமையிழக்க நேரிடும். கைமாற்றுக் கொடுக்கவோ பணவிஷயமாகப் பொறுப்பேற்கவோ இந்த வாரம் சிறந்ததல்ல. எந்த விஷயத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து செய்வது நல்லது.

## குரோதி வருஷ திருக்கணித பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் கணிக்கப்பட்டது. 77-ம் வருடப்பிரசுரம். பக்கம் 85 விலை ரூ. 1/50.

கோரக்குரோதி தனிற்
கொள்ளை மிகுங் கள்வரினற்
பாரிற் சனங்கள் பயமடை
வார் – கார்மிக்க
அற்ப மழை பெய்யுமஃகங்
குறையுமே
சொற்ப விளைவெனவே
சொல்

இவ்வாறு குரோதி வருஷத்தின் பலன் கூறிக்கொண்டு 64—65 ஆண்டுப் புதுப்பஞ்சாங்கம் வெளிவந்திருக்கிறது.

அட்சராரம்பம், வித்தியாரம்பம், உற்சவாதிகள், விவாகப் பொருத்தம், வீடுகட்டுதல், புதுமனைப் பிரவேசம், கிணறு, குளம் தோண்டுதல், கரும்பு, வாழை, கத்தரி, மிளகாய், புகையிலை நடுகை, நெல் விதைப்பு, பிரயாணம், தீட்சை முதலாக நமது அன்றாட வாழ்க்கையைத் தழுவியமொத்தம் 75 பல்வேறு காரியங்களுக்கு பக்கத்துக்குப்பக்கம் விரிவான முறையில் நாளும் வேளையும் நற்பலனும் கூறப்பட்டிருக்கின்றன. இதுதவிர, வழக்கமாக இடம் பெறும் மற்றும் வார, திதி, நட்சத்திர, யோக கரணம் ஆதியாம் அங்கங்களும் தொகுத்துத்தரப் பட்டிருக்கின்றன.

சென்ற வருஷத்தைப் போல நவராத்திரி, தீபாவளி, சிவராத்திரி ஆகியவற்றில் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் வேறுபடும் முரண்பாடான அறிவித்தல்களை குரோதி வருஷப் புதுப்பஞ்சாங்கம் தவிர்த்துக்கொண்டுள்ள போதிலும், 'பஞ்சாங்க கணிப்பில் குருமார் ஆசாரியார்களின் தலையீடு' என்ற தலைப்பில் வெளியாகியிருக்கும் ஓர் அறிவித்தல் பின்வருமாறு கூறுகிறது:-

வாக்கிய பஞ்சாங்கங்கள்யாவும் 1443 வருடங்களுக்கு முன்னியற்றப்பட்ட வாக்கியங்களைத் திருத்தாமல் உபயோகித்துக

(3-ம் பக்கம் பார்க்க)

# நமதுமுனி–யோகபிரான்

— பச்சிலைப்பள்ளி—நாவலர்தாசன் —

தூதுவனுய் நின்ருயென் துணையு மானுய்
தொல்லைகளெல் லாமநீங்கத் தொண்டு செய்தாய்
ஆதவனுய் அருளொளியாய் அருமைத் தாயாய்
அன்புள்ள தந்தையுமாய் குருவும் ஆனுய்
வேதமுமாய் வித்தைகளாய் விளங்கும் ஞான
விளமுதலே வினைநீக்கி ஆண்ட கோவே
மாதவனும் யோகமுனி வாழ்த்த வேண்டி
வந்திருந்தாய் சிவதொண்டன் நிலையம் தானே.

மனத்துள்ளே நின்றிட்டாய் மனமும் ஆனுய்
மன்மதபா ணங்களெனைத் துளையா வண்ணம்
நினைத்துள்ளே கருணைபுரிந் தென்னை யாண்டாய்
நீநினைத்த இடமெல்லாம் நிறைந்து நின்ருய்
வனத்துள்ளே சென்றுதவம் செய்தல் நீத்து
வண்மையுடன் தன்னாட்டு மக்கள் வாழ
இனத்துள்ளே யிருந்துலகமெல்லாம் போற்ற
இருந்தவம்செய் சிவயோகன் வணங்கும் மூர்த்தி.

யோகியாய் இருந்திட்டாய் யோகர்க் கெல்லாம்
யோகத்தின் இருப்பிடமாய் முடிவும் ஆனுய்
தியாகியாய் சேவிக்கும் தொண்டன் ஆனுய்
சிவதொண்டின் பெருமையினைச் செப்ப வந்தாய்
போகியாய் இருப்பவர்க்குப் புவனம் தந்தாய்
பொறுப்பேற்று அவர்வாழத் தவமீ செய்தாய்
"தாகி"யாய் தற்பரனுய் மௌனியானுய்
தவத்திலுயர் சிவதொண்டன் கண்ட கோவே.

கல்வியெலாம் நீயானுய் கலவி யானுய்
கலியுகவிஞ் ஞானமெலாம் கடந்து நின்ருய்
தொல்லைதரும் யுத்தங்கள் யாவும் வைத்தாய்
தோற்றுமடிந் திடுவார்வென் றிடுவாய் நீயே
எல்லையிலாக் கருணைபொழிந்திடுமென் கோவே
எளியனையும் ஆண்டருள எண்ணம் கொண்டாய்
பல்விகற்ப மாமுனது கூத்தைப் பாரில்
பகர்வதெவன் சிவதொண்டன் நிலையத்தேவே.

சிவதொண்டின் பெருமைதனைச் செப்பவேண்டி
சிவதொண்டன் நாடெங்கும் செல்ல வைத்தாய்
சிவதொண்டர் பெருமையினைக் காட்டவேண்டி
திருக்காந்த ஞய்ச்சீடன் ஒருவன் பெற்ருய்
சிவதொண்டு சிறந்திடநன் னிலையம் செய்தாய்
"சிவ அனுபூதித் தமிழால்" சைவம் காத்தாய்
சிவதொண்டே உயர்தொண்டு மக்கள் தொண்டு
சிவம்வாழச் சிவலிங்கம் தந்தாய் போற்றி.

யோகத்தின் முழுமுதலே கர்ம யோகம்
முதலைந்து யோகமுமாய் முழுதும் ஆனுய்
தாகத்தின் சாந்திகுத தண்ணீர் ஆனுய்
தனைவருத்தும் பசிப்பிணிக்குச் சாதம் ஆனுய்
காகத்தின் கூட்டங்கள் போலப் பக்தர்
கட்டறுக்கத் தினந்தோறும் 'தொண்டன்' செல்வர்
வேகத்தின் சுரம்தீர்க்கும் விந்தை சொல்லி
வீற்றிருக்கும் யோகலிங்க முகூர்த்தம் தானே.

"பொல்லாப்பொன் றில்லை"யெனப் புகட்டி நின்ருய்
புவியெல்லாம் கடைத்தேறும் பொன்வாக்காலே
"எல்லாம்முன் முடிந்தகா ரிய"மென் றிட்டாய்
எம்பெருமான் நடமாடுந் தெய்வம் அன்ரே
"எல்லாம் 'ஓம்' எல்லார்க்கும் 'ஓம்'" என்றிட்டாய்
ஏசுகின்ருய் பேசுகின்ருய் எல்லாம் சொன்னுய்
கல்லாமற் கண்டறிந்தார் கடந்தார் சோகம்
கவியோக முனிவணங்கும் கடவுளாரே.

குருலிங்க சங்கமமாய் இருந்தாய் போற்றி
குருசீட பரம்பரைக்கோர் மகுடம் போற்றி
திருவடிசேர் இலிங்கமுமாய் திகழ்ந்தாய் போற்றி
சிவதொண்டன் என்ெருருபேர் புனைந்தாய்போற்றி
குருபக்திக் கிலக்கணமாம் குருவே போற்றி
குருபரன்தான் சேவிக்கும் கோவே போற்றி
ஒருநற்சிந் தனைதந்த உலகே போற்றி
ஒலிபோற்றி ஒளிபோற்றி அணுவே போற்றி.

நாவலர்போல் பெருமைமிகு துறவுசேவை
நமதுமுனி யோகர்பிரான் தவத்தில் மிக்கோன்
பாவலர்செந் நாப்போதர் பாடல் வல்லோர்
பலநடனம் பாரேத்தப் புரிவோர் தந்தாய்
காவலரும் கணக்கறிஞர் சட்டம் வல்லோர்
கரைந்துருகி வணங்குசிவதொண்டன் மன்னு
நாவலர்தா சன்பாட வைத்தாய் போற்றி
நவில்பதிகம் படிப்போர்க்கு மோட்சம் நல்காய்.

23-12-1961

# இரைச்சல் சப்தத்தினுல் இருதய நோய் ஏற்படுகிறது

மேற்கு ஜெர்மனியில் புதுப் புதுக்கட்டிடங்கள் எழும்பிவருகின்றன. தொழில்கள் பல விஸ்தரிக்கப்படுகின்றன. இவை காரணமாக சப்தம் ஏகமாக ஏற்படுகின்றது. இந்த இரைச்சல் பேரொலி காரணமாக மனிதனின் நரம்பு தளர்ச்சியுற்று மிகவும் பாதிக்கப்படுகிறது. பிராங்க்பர்ட் நகரில் சமீபத்தில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் டாக்டர்களும் விஞ்ஞானிகளும் இந்த ஒலியைக் குறைப்பது அல்லது கட்டுப்படுத்துவது எப்படி என்பது பற்றி விவாதித்து இதற்கான நடவடிக்கையை எடுப்பது என்று முடிவு செய்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனி நகரங்கள் “நாளொரு மேனியாகவும் பொழுதொரு வண்ணமாகவும்” மாறிவருகின்றன. ஹாம்பர்க், டஸ்ஸல்டார்ப், பிராங்க்பர்ட், ஸ்டட்கார்ட், முனிச் ஆகிய இடங்களில் வானளாவிய கட்டிடங்கள் எழும்பி வருகின்றன. தொழில்கள் பெருகித் தொழிற்சாலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் காரணமாக இரைச்சலும் பேரொலியும் அதிகரித்துள்ளன. இந்தப் பேரொலி மனிதர்களுக்கு நரம்புத்தளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த ஒலிகளை எப்படிக் குறைப்பது அல்லது எப்படி வெளிப்படாமல் செய்வது என்பன குறித்து டாக்டர்களும் விஞ்ஞானிகளும் இங்குகூடிய மகாநாடு ஒன்றில் ஆராய்ந்து வருகின்றனர். ஸ்டட்கார்ட்டில் நடைபெற்ற டாக்டர்கள் கூட்டம் ஒன்றில் இப்போது ஏற்படும் இருதய வியாதிகளுக்குப் பெரும்பாலான காரணம் இந்தப் பேரொலிதான் என்பது சந்தேகத்திற் கிடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளதாகவும் சப்தம் ஒரு அளவை மீறினல் அது நரம்புத்தளர்ச்சியை உண்டாக்குகிறதென்றும் அவர் கூறினர். இந்த ஒலி பாதிப்பது சம்பந்தமாக ரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதாகவும் இதனல் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் ரத்தக் குழாய் வியாதிகள், மூளை வியாதி முதலியன ஏற்படுவதாகவும் இவர் கூறினர்.

பிராங்க்பர்ட் மகாநாடு ஒன்றில் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒலியை எப்படி ஒடுக்குவது என்பதைக் குறித்து ஆலோசித்தனர். பெர்லின், ஆக்கென், பிரான்ஸ்விக், ஸ்டட்கார்ட் ஆகிய இடங்களிலுள்ள “டெக்னலஜிகல்” பள்ளிகளில் இப்பிரச்னை குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒலியை ஒடுங்கச் செய்வதற்கான வழிகள் மிகச் சீக்கிரமே கண்டுபிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெர்மன் இயந்திரத் தயாரிப்பு கம்பெனிகள்கூடி இவ் விஷயமாக ஆலோசித்தன. பெரிய சுத்தி உபயோகிக்கும்போதோ அல்லது தகடுகளை அடித்து ஒழுங்கு செய்யும் இயந்திரங்களை இயக்கும்போதோ சப்தம் ஏற்படுவதை தடுப்பதற்கில்லை என்று இவர்கள் முடிவுசெய்தனர். ஆனல் இந்த இயந்திரங்களை ஒலி வெளியே போகாத அறைகளில் வைத்து இயங்கச் செய்யலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். எது எப்படியிருந்தாலும் இவ் விஷயமாக இப்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

# தமிழ் வளர்க்கும் மலாயா

## மலாயா பல்கலைக்கழகத்தில் இந்தியப் பகுதி

— வித்துவான் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல். —

மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்தியப்பகுதி வியத்தகு முறையில் பல துறைகளிலே தொண்டாற்றி வருவது மகிழ்ச்சிக் குரியது. இந்தியாவும் மலாயாவும்பல நூற்ருண்டு காலம் நெருக்கிய தொடர்புடையனவாக இருந்து வருகின்றன. மலாயாவில் வாழும் மக்கள் பேசும் மொழிகளில் தமிழ் மொழியும் கணிசமான இடம் பெற்றது. எனவே, மலாயாப் பல்கலைக்கழக இந்தியப் பகுதியில் தமிழுக்கு முதன்மையளித்திருப்பது பொருத்தமானதே. இந்தியாவின் பழம் பெரும்மொழிகள் சமக்கிருதமும் தமிழுமாகும். தமிழுடன் சமக்கிருதத்தையும் படிக்கும் வாய்ப்பை இந்தியப் பகுதி நல்கி இம்மொழிகள் வாயிலாக மலர்ந்து பொலியும் இலக்கியச் செல்வத்தையும் சமய நெறிகளையும் தத்துவங்களையும் கலைகளையும் இந்திய தமிழ் மாணவர்களையன்றிச் சீன, மலாய மாணவர்களும் கற்றுக்கொள்வதற்கு வழி வகுத்துள்ளது.

### நாட்டொற்றுமைக்கு நல்வழி

பல இனத்தவர்கள் வாழும் நாட்டில் ஒற்றுமையும் சமத்துவமும் அமைதியும் நிலவுதற்கு ஒவ்வோர் இனத்தவரும் பிற இனத்தவர்களுடைய இலக்கியம், கலை, பண்பாடு, வாழ்வியல், சமயவியல் முதலியவற்றைஓரளவேனும் அறிந்து மதித்தல் இன்றியமையாதது. மலாயாவிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்களான மலாய் மாணவர்களும் சீன மாணவர்களும் இந்தியவியலை அறியும் ஆர்வமுடையவர்களாக தமிழையும் சமக்கிருதத்தையும் பயில்வது மலாயாவின் எதிர்காலம் சிறப்புறுமென்பதை நன்கு காட்டுகிறது. இத்துறையில் இவர்கள் பல நாடுகளுக்கு வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றனர்.

### தமிழ் கற்கும் வாய்ப்பு

தமிழிலே பி. ஏ. ஆனசுப் பட்டம் பெறத்தக்க வாய்ப்பும் பி. ஏ. க்கு உரிய இரு பாடங்களில் ஒரு பாடமாகத்தமிழைப் பயிலத்தக்க வாய்ப்பும் இந்தியப் பகுதியில் உண்டு. சீன மொழியையும், மலாய்மொழியையும் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக முதலாம் ஆண்டில் தமிழை அல்லது சமக்கிருதத்தைப் படிக்கவும் இந்தியவியலிற் பொது அறிவைப் பெறவும் பொருத்தமான கல்வித் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள மாணவர்கள் தமிழைத் தம் வீட்டு மொழியாகவும் கொண்டு அதனை நன்கு பேசியும் எழுதியும் பயின்று வருகின்றனர். இங்குள்ள தமிழ் மாணவர்களிற் பலர் வாழ்க்கை வசதிகள் நிறையப்பெற்ற யாவருமே வீட்டிலே தமிழைப் பேசிப் பழகுவதற்கு வாய்ப்பற்றவர்களாக இருக்கின்றனர். இஃது ஒரு பெருங் குறையாகும். இதற்கு இம்மாணவர்களுடைய பெற்றோரின் தமிழ்மொழி ஆர்வக்குறைவே காரணமாகும். தாய்மொழியாம் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தை வீட்டு மொழியாக்கியுள்ள தமிழர்களின் போக்கு இரங்குதற்குரியது. தமிழின்றித் தமிழர்கள் தமிழர்களாக வாழமுடியாது என்பதை ஆங்கில மோகங்கொண்டு மயங்கிய தமிழ்நாட்டுத் தமிழரும் இலங்கைத் தமிழரும் உணர்ந்து திருந்திக் கொண்டனர். இங்குள்ள தமிழரும் தாய்மொழியின் அருமையையும் இன்றியமையாமையையும் உணர்ந்து போற்றுங் காலம் விரைந்து வந்துகொண்டிருக்கிறது.

### சில இடர்ப்பாடுகள்

தாய்மொழியாம் தமிழை வீட்டு மொழியாகக்கொண்டு பயிலாமையால் இந்தியப் பகுதியிலே தமிழிற் புலமைபெற விரும்பும் மாணவர்களுக்குச் சில இடர்ப்பாடுகள் உண்டாகின்றன. பிழையின்றி எழுதவும் பேசவும் அவர்கள் பெரும் முயற்சி செய்யவேண்டியவர்களாயிருக்கின்றனர். வீட்டுச் சூழலாலும், இளமைக் கல்வி முறையாலும் உண்டான இந்த இடர்ப்பாடுகளை நீக்கித் தமிழ்மொழியை நன்கு கற்பதற்கு இம்மாணவர்கள் அயராமலும் அஞ்சாமலும் உழைப்பது போற்றத்தக்கது. இவர்களுடைய குறைபாடுகளை நீக்குதற்கு இந்தியப்பகுதி பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளார் பற்பல புதுமுறைகளைக் கையாண்டு வெற்றியீட்டியுளர். தமிழைச் சிறப்பாகக் கற்றுப் பட்டம்பெற்ற தமிழ் மாணவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழைப் படித்து பட்டம்பெறும் தமிழ் மாணவர்களுக்கு எவ்வகையிலும் குறையாத தகுதியுடையவர்களாக விளங்குகின்றனர்.

### ஆராய்ச்சித்துறை

பாடங்களைக் கற்பித்தலைக் ஊக்குதலைப்போல ஆராய்ச்சியையும் ஊக்குதல் பல்கலைக்கழகத்தின் தனிக்கடமையாகும். இந்தியப் பகுதி இந்தத் தொண்டையும் சிறப்புறச் செய்துவருகிறது. இப்பொழுது எம். ஏ. படிக்கும் மூன்று மாணவர்கள் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தியப் பகுதியிலுள்ள விரிவுரையாளர்களும் பலதுறைகளில் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

இந்தியாவில் மட்டுமன்றி அமெரிக்கா, உருசியா, பிரான்ஸ், செக்கோசிலவக்கியா, சேர்மனி முதலியநாடுகளிலும் தமிழியல் (Tamilology) ஆராய்ச்சியில் பல பேரறிஞர்கள் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். இவர்கள் யாவருடனும் தொடர்புகொண்டுபொதுவாக இந்தியவியல் ஆராய்ச்சியையும் சிறப்பாகத் தமிழியல் ஆராய்ச்சியையும் புதுமுறைகளில் வளர்ப்பதற்கு இந்தியப் பகுதியும் அதன் தலைவர் தவத்திரு தனிநாயக அடிகளாரும் செய்துவரும் பெருமுயற்சி மலாயா மக்களால் மட்டுமன்றி உலகத்துப் பேரறிஞர்களாலும் போற்றுதற்குரியது.

பாடக்கல்விக்கும் ஆராய்ச்சிக் கல்விக்கும் சிறந்த நூல் நிலையம் இன்றியமையாதது இந்தியப்பகுதியோடு தொடர்புடைய பல்கலைக்கழக நூல்நிலையம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்ந்து வருகிறது. தமிழியலில் எந்தத் துறையினையும் ஆராய்தற்குப் போதிய வாய்ப்பை உடைய நூல்நிலையமாக இது உருவாகிக்கொண்டுவருகிறது. உலகத்திலேயே தமிழியல் ஆய்வுக்குரிய தனிச்சிறப்புடையபெரும் நூல்நிலையமாக ஆகத் தக்க வாய்ப்பு இந்நூல்நிலையத்துக்கு இருக்கின்றது.

பொதுவாக இந்தியப்பகுதியும் சிறப்பாகத் தமிழியலும் நன்கு வளர்ச்சியடைவதற்கு மலாயா அரசாங்கம் போதிய ஆக்கமும் ஊக்கமும் நல்கிவருகிறது. நூல்நிலைய ஆக்கத்திற்கும் இந்தோனேசியா, தாய்லாந்து முதலிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு பரந்துள்ளமையை ஆராய்தற்கும், தமிழியல் ஆராய்ச்சிக்கும் தமிழ்மக்கள் பலர் தனித்தும் சேர்ந்தும் நன்கொடைகள் வழங்கியிருக்கின்றனர்.

# குரோதி வருஷ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)


கணிப்பதால் அவற்றுல் வரப்பெறும் திதி நட்சத்திர அந்தங்கள், மாத சங்கிராமணம் கிரகப் பெயர்ச்சி ஆதியன திருக்கணித பஞ்சாங்கங்களுடன் அதிக பேதமடைகின்றன.

இவ்வேறுபாட்டை நீக்குதற் பொருட்டே இந்தியாவில் பற்பல இடங்களில் பஞ்சாங்க சோதனை மன்றங்கள் ஏற்படலாயின. இவற்றுள் மகாராஷ்டிர பஞ்சாங்க ஐக்கியமண்டலி, கல்லடி மகாநாடு, மைசூர்வான சாஸ்திர மகாநாடு ஆகியன முக்கியமானவை. இவைகள் யாவும், காட்சிக் கொப்ப கணிக்கப்படும் பஞ்சாங்கங்கள் எதுவோ அதுவே சகல கருமங்கட்கும் அனுஷ்டிக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்துள்ளனர். ஈற்றில் 1957-ல் இந்திய பஞ்சாங்க சீர்திருத்தச் சபையினர் இந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் பிரசுரிக்கப்படும் பஞ்சாங்கங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்த பின்னர் 51பஞ்சாங்கங்களேசாஸ்திரோக்தமான முறையில் கணிக்கப்படுவதாக வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறிருக்கவும், எப்பஞ்சாங்கம் கைக்கொள்ளப்படவேண்டுமென்பதை அறியும் ஆற்றலற்ற சில குருமார்களும் சிவாசாரியார்களும் பஞ்சாங்க விரத நிர்ணயங்களில் சரிபிழை ஆராயத்துணிந்தது எக்காரணம் பற்றியோ?


## இப்பொழுது விற்பனையாகிறது !

இறக்குமதி செய்யப்பட்டு எம்மால் புதிதாக்கப்பட்ட டயர்கள்



அளவுகள்

560—13

520—14

560—15

590—15

விற்பனையாளர்கள்:

1. இராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
2. ஹோம் நீட்ஸ், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்.
3. S. சிவகடாட்சம், வேலணை.
4. P. H. சிறிசேன நெல்லியடி, கரவெட்டி.
5. P. S. முகம்மது & சன்ஸ் வவனியா.

## நோர்தேன் இன்டஸ்ட்ரீஸ்,

75, அரசடி வீதி, தொலைபேசி: 7158 யாழ்ப்பாணம்.

தந்தி: “நோர்தின்ட்”

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு பங்குனி மீ 23உ (5-4-64)


## திருவிழாக்கள்

யாழ்ப்பாணத்திலே இது கோவில் திருவிழாக் காலம். பல ஊர்களிலும் திருவிழாக்கள் போட்டா போட்டியுடன் சிறப்பாக நடப்பதையும் ஊர்மக்கள் பலரும் சேர்ந்து உற்சாகத்துடன் இதில் கலந்துகொள்வதையும் பார்க்கின்ருேம்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளும், புரட்சி இயக்கங்களும் ஒருபுறம் எவ்வளவோ நடைபெற்று வந்தாலும், நம் கிராமமக்கள் தங்கள் கோவில் திருவிழாக்களை அதிக சிறப்பாகக் கொண்டாடுவதில் ஊக்கமெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது

திருவிழாக்களுக்கு அதிகபணம் செலவிடப்படுகின்றன. இப்படிச் செலவாவது வீணுகுமா? திருவிழாக்களை நடத்துவதால் ஊருக்கு என்ன நன்மை? அல்லது இதனுல் மூட நம்பிக்கை வளருகின்றதா பகுத்தறிவு யுகத்திலே கேட்கப்படக்கூடிய முக்கிய கேள்விகள் இவை.

ஊர்மக்களில் பலரும் தெய்வத்தின் பெயரால் கோவிலில் ஒன்றுகூட முடிவதே பெரிய காரியம். சாதாரணமாக நாமனைவரும் நாம், நம் குடும்பம் என்று சுயநலவாழ்க்கையிலேயே ஈடுபட்டிருக்கின்ருேம். ஊர்நலனுக்காக ஒற்றுமைப்பட்டுக் கூடுவது மிக மிகக் குறைவு. இக்குறையை நீக்க, கோவில் திருவிழா நல்ல வாய்ப்பு அளிக்கின்றது.

கோவிலில் காப்புக்கட்டி கொடியேறிவிட்டால், இந்த ஊரைவிட்டு விழா முடியுமட்டும் யாரும் வெளியே செல்லப்படாதென்றும், அப்படி அவசரமாகச் செல்லநேரிட்டால், கொடி இறக்குவதற்குள்ளாகத் திரும்பிவிட வேண்டுமென்றும் ஒரு நியதியுண்டு. இதன் நோக்கமென்ன?

கோவில் திருவிழாக்காலத்திலாவது ஊரெல்லாம் ஒன்றுபட்டு தெய்வத்தின் பெயரால் தங்களிடையே நல்லுறவை வளர்த்துக்கொள்ளவேண்டுமென்பதுதான்.

இவ்வித ஒற்றுமையை ஏற்படுத்துவதென்பது இலேசன்று. இந்தியாவிலே விஞேபா பாவேயின் முயற்சியால் பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. என்ருலும் அக்கிராமமக்களிடையே கூட ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த முடியாமலிருப்பதாயும், இதற்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை என்றும், அந்த இயக்கத்திலே முக்கிய தலைவருள் ஒருவர் பகிரங்கமாகத் தம் திகைப்பைத் தெரிவித்தார் இந்தக் கஷ்டமான காரியத்தை, திருவிழாக்கள் மூலம் நம் கோவில்கள் செய்வதை நினைக்கும்போது, திருவிழாக்களின் முக்கியத்தையும், அதற்குச் செலவிடும் பணம் வீணல்லவென்பதையும் உணரக்கூடியதாக இருக்கின்றது.

இன்று நம் வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் ஏற்படும் பல பல பிரச்னைகளையும் சற்றே ஆராய்ந்தால், அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் குறுகிய சுயநலமென்பதை உணரலாம். இக்குறுகிய எண்ணங்களை ஒழித்தாலே, நமது பல பிரச்னைகளும் நீங்க உண்மையில் வழி பிறக்கும். இதற்கு ஆரம்பமாக ஊர் மக்களின் நன்மைக்குத்திருவிழாக்களை நடத்துவது, பயன்படுகின்றது.

செல்வந்தர்கள் முன்வந்து திருவிழாக்களுக்காக பல கலைஞர்களையும் அழைப்பித்து கலை விருந்துகளை அளிப்பதால், ஊர் மக்கள் அதிகமாகக் கோவிலுக்கு வந்து இன்புறவும், இதே சமயம் கலைஞர்களுக்கு ஆதரவு கிடைத்து, இதன்மூலம் கலைகள் வளரவும் வாய்ப்பிருக்கின்றது. சில இடங்களில், கிராமத்தவர்களே கூடி தங்களிடையே பணவசூல் செய்து திருவிழாக்களை நடத்துகின்ருர்கள். இவ்விஷயத்தில் வரவர அதிக உற்சாகம் காட்டப்படுவது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

நமக்குள்ளாகவே தெய்வம் இருப்பதாகவும், தெய்வத்தை வழிபட கோவிலுக்குச் செல்லவேண்டிய தில்லை என்றும் வேதாந்தம் பேசலாம். உண்மைதான். ஆனுல் நாம் உலகிலே தனிப்பட்டு வாழ முடிவதில்லை. நம் வீட்டிலும், நாட்டிலும் பலருடனும் சேர்ந்து வாழவேண்டியிருக்கிறது. அதனுல் பலபல சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனிப்பட்ட முறையில் அமைதியாகப் பிரார்த்தனை செய்வது நம்மைப் பொறுத்தமட்டில் போதுமானதே. ஆனுல் நாம் குடும்பத்திலும், ஊரிலும் நல்லுறவுடன் சுமுகமாக வாழ, வீட்டுப்பிரார்த்தனையும், கோவில்களில் நடக்கும் கூட்டுப்பிரார்த்தனை, திருவிழா முதலியவற்றில் கலந்து கொள்ளுவதும் மிகவும் உதவியாக இருக்கின்றது.

ஆகவே திருவிழாக்கள் அதிக சிறப்பாகவும், பயனுள்ள முறையிலும் நடப்பது, நமக்கு மட்டுமன்றி, ஊர்நன்மைக்கும் மிகவும் பயன்படுமாதலால், இந்தச் சிறந்த பணியில் ஈடுபடுபவர்களும் ஒத்துழைப்பவர்களும், ஊருக்கு மேலான நன்மை செய்பவர்களாவர்.

## இயற்கை வைத்தியமும் கடவுள் பக்தியும்

— விஞேபாஜி —

நீங்கள் திறந்த வெளியில் வயற்புறங்களில் போய்வாழ வேண்டும். இயற்கை முறையில் வைத்தியம் செய்வதற்கு இயற்கையுடன் தொடர்பு கொண்டு அதன் மத்தியில் போய் இருப்பது அவசியம். நகரங்களில் இருப்பவர்களுக்கு நோய்வந்தால் அவர்களும் இவ்வாறுதான் செய்யவேண்டும். இயற்கையோடு மிகவும் நெருங்கி வாழ்வது மிகவும் முக்கியம். மக்கள் வாழ்க்கை இயற்கைக்கு மாருய் இருந்து வருவதால் நோய்கள் வருகின்றன. நோய் வந்ததும் உடனே அதற்கு வேண்டிய சிகிச்சை செய்வதில்லை. அதை வளர விட்டு, பல ஆண்டுகள் அவதிப்பட்டபின் சிகிச்சை தொடங்குகையில் நோயைப் போக்குவது கஷ்டமாகி விடுகிறது. அப்போது கடவுளின் கிருபை இருந்தாலல்லது நோயாளி பிழைப்பதில்லை. இதற்கிடையில் என்னென்னவோ வைத்தியங்கள் செய்து பார்க்கிருர்கள். இறுதியில் கடவுள் அருளால் பிழைக்கக்கூடியவன் பிழைக்கிருன்; ஆயுள் இல்லாதவன் கதை முடிந்து போகிறது. எனவே இந்த மருந்துகளும் சிகிச்சைகளும் பலவிதமான சோதனைகளே. நோய் நொடியின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்குத் தேவையாய் இருப்பவை தூய, அடக்கமான, ஒழுங்கு தவருத, உழைப்போடு கூடிய வாழ்க்கையே. இந்த

(5-ம் பக்கம் பார்க்க)

ஈழவளநாட்டுப் பிள்ளையார் கோவில்கள்: 1

## மானிப்பாய் மருதடி விநாயகர்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

“நாதவிந்து கலாதீ நமோ நம” என்ருர் அருணகிரிநாதர். நாத தத்துவம் விநாயகர். அவர் பிரணவமந்திரவடிவினர். விநாயகர்வடிவம் ஞானவடிவம். விநாயகரை வழிபட்டுத்தான் எல்லாக் காரியங்களையும் பூசைகளையும் விழாக்களையும் தொடங்குவது நமது சைவமக்கள் மரபு. புத்தாண்டு தொடங்கும் பொழுது யாழ்ப்பாணத்திலே மானிப்பாய் மருதடி விநாயகப் பிள்ளையார் கோவிலில் தேர் அலங்கார மகோற்சவம், கண்கொள்ளாத காட்சியாக இருக்கும். இக்கோவிலில் உள்ள தேர் உன்னத விசித்திர அலங்காரம் அமைக்கப்பெற்றது. என்னுடைய முன்னேர், தந்தை, பாட்டன், கொப்பாட்டன் முதலியோர் மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான் மீது அளப்பரிய விசுவாசம் உள்ளவர். இக்கோவிலுக்கு வெள்ளிக்கிழமை, விழாக்கள் தோறும், வண்ணைநகரிலிருந்தும் போய் வந்தனர் என்பது ஞாபகம்.

மருதடி விநாயகர் கோவில் சூழலில் நெற்கழனிகள், மருதமரங்கள் பல இன்றும் நிற்கின்றன. இவ்விடம் மருதஞ்சோலை என்று அழைக்கத்தக்கதாய் பூதவமரங்கள் அடர்ந்தோங்கி வளர்ந்திருந்தன. இச்சோலையில் ஒரு மகானுபவர் சமாதியாய்விட்டனர். இங்கு விநாயகர் ஆலயம் தமிழ் அரசர் காலந்தொட்டு இருந்தது.

போர்த்துக்கீசர் வடஇலங்கையில் அழித்த இந்துக் கோவில்களில் பலவற்றுள் இதுவும் ஒன்று. ஒல்லாந்தர் காலமும் இருள்சூழ்ந்தகாலமே. அக் காலத்தில் பல மக்கள் புறத்தே கிறிஸ்தவர்களாகவும், அகத்தே சைவராகவும் “இருவாழ்வு” வாழ்ந்தனர், இப்பொழுது உள்ள மருதமரத்தின் கீழ் பறங்கியர் கண்களுக்குப் புலப்படாத நேரங்களிலும் இராக்காலங்களிலும், பொங்கலிட்டு, கற்பூரம் எரித்து விநாயகரை வழிபட்டுவந்தனர்.

### ஆட்டுப்பலியை வெறுத்தல்

தொண்டை மண்டலத்திலே (சென்னைக்கு அண்மையில்) நடந்த ஓர் இராசகலகத்திற்கு அஞ்சி பல வேளாள குடும்பத்தவர் புறப்பட்டுவந்து யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, காரைநகர் முதலிய இடங்களில் குடியேறினர். இவர்களுள் தியாகராசக்குருக்கள் என்னும் சைவமுதலி வேளாளகுடும்பத்தைச் சேர்ந்தவர், நவாலி வயல்களில் இருக்கும் தூக்கிணி வைரவர் கோயிலடியில் வந்து தங்க நேரிட்டது. அவ்வைரவர் கோயிலுக்கு மக்கள் ஆட்டுப்பலி கொடுத்து வந்தனர். தியாகராசக் குருக்கள் இதற்கு உருக்கமாக ஆட்சேபனை செய்தார். அதை மக்கள் பொருட்படுத்தவில்லை. ஆகவே அந்த இடத்தை விட்டுவிலகி மருதடி விநாயகர் கோவில் சோலையை அடைந்தார்.

இச்சோலைக்கு அணித்தாயுள்ள காணிகள் மானியம்பதி சுவாமிநாத முதலியாருக்குரியது. இங்குள்ள குளமும், மருதமரங்கள் நின்ற இடமும் முக்கோணதிடர் எனப்பட்டது. இக்காட்சி தியாகராசக் குருக்கள் மனதை ஈர்த்தது. இங்கு விநாயகர் சிலைவைத்து சைவக் குருக்கள் பூசித்து வந்தார். சுவாமிநாத முதலியார் ஒல்லாந்தரிடம் சேவைசெய்தபடியால், அவர்களுக்கு அஞ்சி, விநாயகர் சிலையை இவ்விடம் விட்டு நீக்கிவிட்டார்.

### செட்டியார் விக்கிரகம் வழங்கல்

குருக்கள் துக்கசாகரத்தில் அமிழ்ந்தார். இவ்வாறு இருக்கும்பொழுது ஒரு நாள் தியாகராசக் குருக்களுக்கு ஒரு கனவில் விக்கினேசுவரன் தோன்றி “அன்பரே! வண்ணை வைத்தீசுவரன் கோவில் வீதியில் வசிக்கும் சிவன்கோவில் தாபகராகிய வைத்தியலிங்கச் செட்டியாரிடம் சென்று உனது உருவத் திருமேனி அடங்கிய சிலையைக் கேட்பாய். உனது துயர் நீங்கும்” என்று அருளி மறைந்தனர். அதே நேரத்தில் வைத்தியலிங்கச் செட்டியாருக்கும் கனவில் தோன்றி “எனது அன்பன் தியாகராசா உன்னிடம் வருவார். சேட்பதைக் கொடுத்துவிடு” என்று சொல்லி அருளி மறைந்தனர். மறுநாள் குருக்கவ செட்டியாரிடம் சென்ருர். அதன் பின்னர் இருவரும் மருதடி விநாயகரின் புதுமைகளை எவ்லாம் பேசி முடிந்தபின் செட்டியார் தியாகராசச் சைவக் குருக்களிடம் விநாயகர் திருவுருவத்தை வழங்கினுர்.

### விநாயகருக்கு கோவில் அமைத்தல்

இவ்விநாயகரை வைத்து தியாகராசக் குருக்கள் நித்திய நைமித்திய பூசை நடத்திவந்தார். சிறிது காலத்தின்பின் தாம் செய்தது பிழை என்று எண்ணி, தாம் முன்னர் எடுத்துச் சென்ற விக்கினேசுவரர் சிலையை இவருக்குக் கொடுத்தார். இப்பொழுது இது இக்கோவிலில் உள்ள சிவபெருமான் கோவிலுக்கு மேற்கே வைத்துப் பூசை செய்யப்படுகிறது. தியாகராசக் குருக்கள் விநாயகருக்குத் திருக்கோயில் கட்டி மகோற்சவம் நடத்த உத்தேசித்தார். சுவாமிநாத முதலியார் உதவியைக்கொண்டு மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும் கட்டி முடித்தார். எஞ்சிய கோவிற் பாகங்களை மரந்தடிகளால் உருவாக்கிப் பங்குனி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பஞ் செய்வித்து, இருபத்து நான்கு நாட்கள் விசேட விழாக்கள் வைத்துக் கொண்டாடினுர். சித்திரை மாதம் முதலாம் திகதி புத்தாண்டு இரதோற்சவமும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடாத்தி வந்தார். கோயிலை மேற்குத் திசையாக மாற்றவேண்டி இருந்தது. கீழ்த்திசையில் உற்சவம் நடாத்தப் போதிய இடம் இல்லாதிருந்ததே அதற்குக் காரணம்.

### பரோபகாரிகளின் திருப்பணிகள்

ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கினபின்னர் 1815-ம் ஆண்டு இலங்கை மக்களுக்குப் பூரண சமய சுயாதீனம் கிடைத்தது. இக்கோவில் திருப்பணிகளைச் செய்ய பல சைவப் பரோபகாரிகள் முன்வந்தனர். கர்ப்பக்கிருக தூபியும், அந்த மண்டபமும், மகாமண்டபமும், பொன்னம்பலச் சிருப்பரவர்களாலும், சபாமண்டபம் மண்டலத்தார் அவர்களாலும்,ஸ்தம்ப மண்டபம் இரகுநாத முதலியார் சின்னத்தம்பியார் அவர்களாலும், சிவன்கோவில், நடராசர் கோவில், அம்மன் கோவில்கள், தன்மாவரதர் முத்துத்தம்பியவர்களாலும், முற்கோபுரம் தம்பையா முதலியார் அவர்களாலும், மடைப்பள்ளி, வாகன மண்டபம் தெற்கு மானிப்பாயைச் சார்ந்த மருதப்பர் அவர்களாலும், வசந்த மண்டபம் வைரவி ஆசாரியாராலும், வசந்த மண்டபக் கொட்டகை வட்டு நகரில் உள்ள சிவபுண்ணியவான்களாலும், தேர்முட்டியும் இரதமும் இரகுநாத முதலியார் சின்னத்தம்பி அவர்களாலும், கீழைக கோபுரம் செல்லப்பா வயிரமுத்து அவர்களாலும், கீழைக் கோபுரம் செல்லப்பா வயிரமுத்து அவர்களாலும், பொங்கல் மண்டபக் கொட்டகை வன்னியசிங்கம் தம்பிப்பிள்ளை அவர்களாலும், நந்தவனம் ம. சிவப்பிரகாசம் அவர்களாலும், திருமஞ்சனக் கிணறு முருகேச முதலியார் பொன்னுச்சாமி அவர்களாலும், தீர்த்தக் கிணறு முருகேசர் விநாசித்தம்பி அவர்களாலும் அக்கிணற்றுக்குத் தெற்குத் திசையிலே, தீர்த்த மண்டபம் வல்லிபுரம் கனகசபை அவர்களாலும் அமைக்கப்பட்டன. இவ்விநாயகருக்குத் திருமஞ்சம் விஞசித்தம்பி கணபதிப்பிள்ளையின் புத்திரர்களால் செய்யப்பட்டது. இரகுநாத முதலியார் ஒருமுறை கொடியவிடந் தீண்டப்பெற்று அவ்விடம் சிகிச்சைக்கு மேற்கொண்டால் இந்த இரதஞ் செய்துவைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும் அவ்வாறு செய்யப்பட்டதன் மேல் அக்கொடிய விடம்நீங்கி அவர் சுகம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. பெரும்பாலும் விநாயகப் பெருமானின் திருப்பணிகள் இவ்வாறு நடைபெற்றன.

அக்கோவிலில் சிறிதுகாலத்திற்கு முன் நவக்கிரகங்களின் சிலைகள், சிறப்பாக அமைக்கப்பட்டு, அந்த அறையின் புறச்சுவர்களில் ஒவ்வொரு சிலையின் பெயரும் தரப்பட்டிருக்கிறது. இக்கோவிலில் பல வாகனங்கள் உள்ளன.

### இக்கோவில் பூசகர்களும் அதிபர்களும்

சுவாமிநாத முதலியாரின் பின் குமாரசிங்க மணியமும் அவர் மைந்தன் டக்டர் சுவாமிநாதபிள்ளையும் அவரின்பின்

(10-ம் பக்கம் பார்க்க)

# உலகமேடை

டி. எம். எம்

## ஷேக் அப்துல்லா

ஒரு காலத்தில் "காஷ்மீரச்சிங்கம்" எனப் புகழ்பெற்றிருந்த ஷேக் முகம்மது அப்துல்லா, இன்னும் சில தினங்களில் விடுதலையாகவிருக்கிறார். பத்து ஆண்டுகளுக்கு முன், சரியாகவோ தவருகவோ இந்தச் சிங்கத்தைக் கூண்டில் அடைக்கவேண்டிய கசப்பான அனுபவம் இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. ஆம். கசப்பான அனுபவம் தான்.

ஜம்முகாஷ்மீரில் திக்கெட்டும் புகழ் பரப்பும் மக்கள் தலைவராக அவர் விளங்கி வந்தார். அதுமட்டுமா? பண்டித நேருவின் ஆப்த நண்பராகவும், குடும்ப நண்பராகவும் அவர் விளங்கினர். ஒருமுறை ஷேக் அப்துல்லா மன்னரால் கைது செய்யப்பட்டபோது பண்டித நேரு வெகுண்டெழுந்து, ஸ்ரீநகரை நோக்கிக் கிளம்பினர். அப்போது டில்லியில் கிரிப்ஸ் தூது கோஷ்டி இந்திய சுதந்திரம் பற்றி தேசத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இவ்வளவு முக்கியமான சந்தர்ப்பத்தையும் உதாசீனம் செய்துவிட்டு பண்டிதர் காஷ்மீருக்குப் பறந்ததிலிருந்தே, பிற்காலத்தில் ஷேக் அப்துல்லாவைச் சிறையிலடைப்பது அவருக்கு எவ்வளவு கசப்பாய் இருந்திருக்கும் என்பதை அறியலாம்.

ஆனால் இன்றைய நிலையில் ஷேக்ஜீயை விடுதலை செய்வதும் கசப்பான அனுபவம் தான். ஷேக் இல்லாமலே காஷ்மீரில் காரியம்நடத்தி விடலாம் என இந்தியா கொண்டிருந்த கருத்து, வெளிச் சவால்களினல் சுக்குநூருகிவிட்டது. ஷேக் அப்துல்லா கைது செய்யப்படுவதும், விடுதலை செய்யப்படுவதும் ராஜ்ய அரசாங்கத்தின் முடிவைப் பொறுத்தது என டில்லியில் கூறப்படுவது ஒரு "சமாளிப்பே" ஆகும். ஏனெனில் டில்லியின் விரல் அசையாமல் காஷ்மீரில் எதுவும் நடைபெருது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

அப்துல்லா கைது செய்யப்பட்டபோது காஷ்மீரில் அவரது செல்வாக்கு எந்த வகையிலும் குறைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அச்சமயம் இந்தியாவுக்கு வெளித்தொல்லைகள் குறைவாக இருந்ததால் தான் காஷ்மீரச்சிங்கத்தை (ஷெர்-இ-காஷ்மீர்) இந்தியா துணிச்சலுடன் கைது செய்தது. ஆனல் இப்போது காஷ்மீரில் பாகிஸ்தான் குட்டையைக் குழப்பிவிட்டதும், புனிதகேசம் மறைந்ததும் நிலைமையை மறுபக்கம்திருப்பிவிட்டது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட சிக்கல்கள், குழப்பங்கள் சாதாரணமானவையல்ல. ஆனல் இந்தப் பிரச்னையை இந்தியா சமாளித்தவிதம் இருக்கிறதே, அதைப் பாராட்டாமல் இருக்கவே முடியாது. தந்திரம், நுட்பம், லாவகம் அனைத்தும்கொண்டு மகா திறமையுடன் நிலைமை சமாளிக்கப் பட்டிருக்கிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

காஷ்மீர் இந்தியாவுடன் சேர்வதோ, பாகிஸ்தானுடன் சேர்வதோ அல்லது தனி சுதந்திரநாடாய் இருப்பதோ வேறு விஷயம். ஆனல் ஷேக் அப்துல்லாவுக்கு இன்னும் செல்வாக்கு இருக்கிறதென்பதையே புதிய நிலைமை காட்டுகிறது.

59 வயதான ஷேக்ஜீ ஒரு எம். எஸ் ஸி. பட்டதாரி. ஆரம்பத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தவர்.

25-வது வயதிலேயே பொது வாழ்வில் இறங்கிவிட்டார். மத, வகுப்புவாத அடிப்படையில் அவர் ஆரம்பித்த முஸ்லிம் மகாநாடு தான் பின்பு தேசிய மகாநாடாக உருவெடுத்தது. மன்னர் ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி நடத்தியதன் மூலம் பலமுறை அவர் சிறை சென்றவர். காஷ்மீர் படையெடுக்கப்பட்டபோது மக்கள் ஒருமனதாக அவர் பின்னல் நின்றனர். கடைசியாக இதுவரை அவர் 10 ஆண்டுக்காலம் சிறையிருந்து வருகிருர். அவரைச்சிறை வைத்த சக்தி, இப்போது வெற்றிகரமாகப் பின் வாங்கியிருக்கிறது. இதிலிருந்து எதிர்கால காஷ்மீரில் ஷேக் அப்துல்லாவுக்கு இன்னும் முக்கிய இடம் இருக்கிறது என்பது தெளிவாகியுள்ளது.

அவரது விடுதலை பற்றிய செய்தி, இந்தியாவிலும் காஷ்மீர் பள்ளத்தாக்கிலும் மட்டுமின்றி, பொதுவாக உலகம் முழுவதும் சிரத்தை கொள்ளும் அளவு முக்கியத்துவம் பெற்றதற்குக்காரணம், ஒரு கேந்திரமான பூகோள, அரசியல் அமைப்பையும், கெடுபிடியையும் கொண்ட நிலையில் இன்றைய காஷ்மீர் இருப்பதேயாகும்.

★

## மைசூர் மகாராஜா

தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக ஒரு மகாராஜா கவர்னர் பதவி ஏற்கவிருக்கிருர். இந்தியா சுதந்திரமடைந்த புதிதில், தமிழ்நாடு தனி அரசியலமைப்பாக இருக்கவில்லை. தற்போதைய ஆந்திர ராஜ்யத்தின் ஒருபகுதியையும் கொண்ட சென்னை மாகாணமாக அப்போது அது இருந்தது. சுதந்திர இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதலாவது கவர்னராக சர் ஆர்ச்சிபால்ட்நை என்ற ஆங்கிலேயர் பதவி வகித்தார். இரண்டாவது கவர்னராக வந்தவர் ஒரு மகாராஜா. அவர்தான் பவநகர் மகாராஜா. இப்போது மைசூர் மகாராஜா தமிழ்நாட்டின் 6-வது கவர்னராகப் பதவி ஏற்கவருகிருர்.

கவர்னர் பதவியில் ஆடம்பரமும், சுகமும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனல் ஒரு மகாராஜாவுக்கு இது ஒன்றும் பிரமாதமில்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் மகாராஜாக்கள் நடத்திய ஆடம்பர வாழ்வுக்கும், தர்பாருக்கும் முன் கவர்னர் பதவியின் சுகமும் ஆடம்பரமும் நெருங்க முடியாது. உதாரணமாக, மைசூர் மாகாராஜாவுக்கு எத்தனையோ அரண்மனைகள் உண்டு. ஒவ்வொன்றும் சென்னை கவர்னர் மாளிகையைவிட அளவிலும், ஆடம்பரத்திலும் சிறந்தவை.

இந்திய மகாராஜாக்களில் பலர் பல துறைகளில் சிறந்தவர்களாய் இருந்தனர்; இருக்கின்றனர். உலகிலேயே மிகப் பெரிய பணக்காரர் எனக் கருதப்படும் ஹைதராபாத் நிஸாம் மன்னர் சிறந்த உருதுமொழிக்கவிஞர். பாட்டியாலா, பட்டோடி மகாராஜாக்களில் பலர் சிறந்த கிரிக்கெட்வீரர்களாய் இருந்தனர். திருவாங்கூர் மகாராஜா கடவுள் பக்தியும், சைவ உணவுப் பழக்கமும் உடையவர். ஆனல் மைசூர் மகாராஜாவோ பெரிய படிப்பாளி. பலதுறைகளில் மேதை. சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு வருடம் ஒன்றுக்கு 26 லட்சம் ரூபாய் பென்ஷனுகக் கிடைக்கிறது.

இந்தவகையில் ஹைதராபாத் நிஸாமுக்குத்தான் அதிகப் பென்ஷன் கிடைக்கிறது. மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும் சேர்ந்து அவருக்கு வருடம் ஒரு கோடிரூபாய் வழங்குகின்றன.

உலகிலேயே மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தியவர்களில் இந்திய மகாராஜாக்கள் பேர்பெற்றவர்கள். நிஸாம் மன்னர் 600 கார்களும், 30 அரண்மனைகளும் வைத்திருந்தார். பரோடா மன்னருக்கு தினசரிவருமானம் 70,000 ரூபாய். ஜூனகாத் நவாப் 600 வேட்டைநாய்கள் வைத்திருந்தார் பாட்டியாலா மகாராஜா ஒவ்வொருதடவையிலும் 25, 30 என்று ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வாங்குவதில் பிரசித்திபெற்றிருந்தார். கெயிக்வார் மன்னர் ஒரு கோடிரூபாய் பெறுமதியான இரத்தினக் கம்பளம் ஒன்றை வைத்திருந்தார். இந்த மன்னர்களுக்கு கோடைக்கால அரண்மனை, குளிர்கால அரண்மனை, வசந்தகால அரண்மனை என பருவங்களுக்கேற்ற வாசஸ்தலங்கள் உண்டு. சொந்தத்தில் விமானங்களும் உண்டு. இவ்வளவு சுகங்களும் போதாதென்று அடிக்கடி பாரிஸ் இராக்களிப்புகளிலும், இதர ஐரோப்பிய நகரங்களிலும் இவர்கள் காணப்பட்டார்கள். அந்தப்புரத்தில் நூற்றுக்கணக்கான பெண்களையும் இவர்கள் வைத்திருந்தனர். ஆனல் சுதந்திரத்திற்குப்பின் அவர்களின் ஆடம்பரவாழ்வு பெருமளவில் குறைக்கப்பட்டுவிட்டது. பெரும்பாலான மன்னர்கள், கிடைக்கும் பென்ஷனிலேயே வாழ்க்கை நடத்த வேண்டி வந்துவிட்டது. எனினும் இன்றுகூட அவர்களிடம் அபரிமிதமான செல்வம் இருக்கத்தான் செய்கின்றது.

இந்த வரிசையில் மைசூர் மகாராஜாவும் ஒருவர். என்ருலும், சுதந்திர இந்தியாவிலும் அவரதுசேவை ஓரளவு பயன்பட்டுவருகிறது.

முன்பு டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமிஐயர் போன்றவர்கள் வெளிநாடுகளில் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காக வெளிநாடுசெல்வதுண்டு அல்லவா?

அதேபோல் மைசூர் மகாராஜா, ஸ்ரீஜய சாமராஜ உடையாரும் அடிக்கடி வெளிநாடு சென்று பல்வேறு துறைகளில் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றிவருகிருர். இந்திய மகாராஜாக்களில் அவரைச் சிறந்த படிப்பாளியாகவும், அறிவாளியாகவும் குறிப்பிடலாம். எனவே அறிவாளிகள் நிறைந்த தமிழ்நாட்டுக்கு அவர் கவர்னராக வருவது மிகவும் பொருத்தமாய் இருக்கும்.

இந்திய கவர்னர்களிலேயே மைசூர் மகாராஜாதான் உருவில் பெருத்தவர். ஜனதிபதியையும்விட உருவப்பெருக்கு கொண்டவர். தலைப்பாகையுடன் அவர் காட்சியளித்தாலும் சரி, ஆங்கில உடையில் காட்சியத்தளிதாலும் சரி, கம்பீரத் தோற்றமுடன் அவர் காணப்படுகிருர். உருவிலும், அறிவிலும் பெருத்த இந்த மகாராஜா, தமிழ்நாட்டில் நல்ல வரவேற்பைப் பெறுவார் என்பதில் சந்தேகமில்லை.

## இலங்கையை எட்டிப்பார்த்த இரண்டாவது உலக யுத்தம்

— வி. என். பி. —

**1942-ம்** ஆண்டு ஏப்ரல் 5-ம் திகதி ஈஸ்டர் ஞாயிறு. கிறிஸ்தவ ஆலயங்கள் எங்கும் வழக்கம்போல அமைதியாக ஆராதனைநடைபெற்றுக்கொண்டிருந்தது. காலை மணி 7-50 ஆயிற்று. வீட்டில் தங்கியவர்கள்தவிர, கந்தோர்களுக்குப் புறப்படுகிறவர்கள், முழுக் கோதுமை அரிசியில் அவித்த பிட்டை அரை வயிறு உண்டுவிட்டு, சப்பாத்துகளை துடைத்துக் கொண்டிருந்தார்கள். ராட்சஸ வண்டுகள் இரைவது போல ஒரு சத்தம். எல்லோரும் ஆகாயத்தை நோக்கினர்கள். வங்காளக்குடாவின் கருநீலக் கடலுக்குள்ளிருந்து வருவது போல் இரண்டுபடையாக சுமார் 75 விமானங்கள் கொழும்பை நோக்கிவந்தன. யுத்தகாலத்தில் விமானங்கள் பறந்துதிரிவது சாதாரணமான காட்சிதான். எவரும் அதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

சுமார் 8 மணியளவில் அபாயச்சங்கு ஒலமிட்டது. அப்பொழுதுதான் இது சாதாரணமான காட்சியல்ல, என்னவோ நடக்கப் போகிறது என்று மனதில் பட்டது. அடுத்த நிமிஷம் அது நடந்தது. கொழும்புத் துறைமுகத்தின் திசையிலிருந்தும் ரத்மலானைப் பக்கத்திலிருந்தும் 'டும், டும், டுமீல்'என்று வெடியோசைகள் கிளம்பின. நாய்கள் ஒன்றை ஒன்று கலைப்பது போல் விமானங்கள் ஆகாயத்தில் தாறுமாறுகக் கலைத்துத் திரிந்தன. கடலோரத்தில் அமைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பிரங்கிகள் பூமி அதிரும் வண்ணம் வெடித்தன. தீப்பிடித்த விமானங்கள் காது செவிடுபடும் இரைச்சலோடு தரையில் நொருங்கி எரிந்தன.

இரண்டாவது உலகமகா யுத்தம் இலங்கையையும் எட்டிப் பார்த்துவிட்டது.

இதற்கு முந்திய வியாழக்கிழமை ரோயல் விமானப்படையைச் சேர்ந்த பேர்ச்சோல் என்பவர் வங்காள விரிகுடாவில் தனிமையாக ரோந்து சென்று கொண்டிருந்தார். கீழே அவர் கண்ட காட்சி இடியேறுவிழுந்தாற் போலிருந்தது. நாசகாரிக் கப்பல்களும், விமானந்தாங்கிகளும், குரூய்சர்களும், சாரைசாரையாக இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்தன. அடுத்த கணம் அவருடைய ரேடியோ பேசத்தொடங்கியது. இலங்கையிலுள்ளவர்களுக்கு அபாய அறிவித்தல் கொடுத்துவிட்டார். ஜப்பானியர் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? நொடிப் பொழுதில் பேர்ச்சோல். அவருடைய விமானத்துடன் கடலுக்குள் சுட்டுவீழ்த்தப்பட்டார்.

காப்டின் பேர்ச்சோலின் அபாயத் தகவல் வீண்போகவில்லை. அவருடைய ரேடியோ செய்தி கிடைத்தவுடனேயே பிரிட்டிஷ் தூர கிழக்கு கடற்படையின் தலைவர் அட்மிரல் சோமவில் திருக்கோணமலையிலும் கொழும்பிலும் தங்கியிருந்த படைக் கப்பல்கள் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, கும்பகர்ணன் ஒடி ஒளித்தது போல், இந்து சமுத்திரத்துக்குள் மறைந்துவிட்டார். இரண்டு நாசகாரிகளும் ஒரு விமானந்தாங்கியும் ஜப்பானியரிடம் அகப்பட்டுக்கொண்டன. ஒன்றன் பின் ஒன்ருக ஜப்பானிய விமானங்கள் அவற்றைத் தாக்கி ஆழியாத்திரை அனுப்பின.

கொழும்பில் ஜப்பானியர் தாக்கியது துறைமுகத்தையும் ரத்மலானை விமான நிலையம், ரயில்வே தொழிற்சாலை, கொலன்னவை எண்ணைக் குதங்களையுமே. மிலிட்டரி சம்பந்தமான நிலையங்களையே அவர்கள் இலக்கு வைத்தார்கள். ஆனல் அதிர்ஷ்ட வசமாக ஒரு சிறிய பிழை நடந்துவிட்டது. கொலனைவையிலிருந்து சொற்பதூரம் தான் அங்கொடை பைத்தியக்கார ஆஸ்பத்திரி. இந்த ஆஸ்பத்திரியின் கூரையில் ஏனே செஞ்சிலுவைச் சின்னம் போடப்படவில்லை. ஜப்பானிய விமானிகள் தவறுதலாக கொலனைவை எண்ணைக் குதம் என்று நினைத்து பைத்தியக்கார ஆஸ்பத்திரி மீது சக்கை போடு போட்டார்கள். பாவம், மனம் பித்துப் பிடித்துப்போயிருந்தவர்களுக்கு இது ஒரு தெய்வ மீட்சி போலும்! எத்தனை பேர் இறந்தார்களென்று இன்னமும் தெரியது.

அடுத்த நாள் திங்கட்கிழமை காலையில் கொழும்புப்பட்டினத்தில் இனிமேல் காண முடியாத ஒருகாட்சி. கார்கள், லொறிகள், மாட்டுவண்டிகள், ரிக்ஷோக்கள், தள்ளுவண்டிகள், சைக்கிள்கள் - ஆயிரம் ஆயிரமாகக் கொழும்பிலிருந்து புறப்பட்டன. அகப்பட்டதைச் சுருட்டி வாரிக்கொண்டு கொழும்பு மகாசனங்கள் ஊர்வலம் புறப்பட்டுவிட்டார்கள்- உள்நாட்டுக்கு. தெரு வீதிகளில் ஒரு காக்கை குருவிகூட இல்லை. எங்குபார்த்தாலும் ஜப்பான் காரன் இறங்கிவிட்டான் என்பதேபேச்சு.

இலங்கை மீது படையெடுத்து வந்து அதைக்கைப் பற்றிக்கொள்ள நினைத்த ஜப்பானியர் அந்த எண்ணத்தை ஏன் கைவிட்டு விட்டார்கள் என்பது மகாயுத்த மர்மங்களில் ஒன்ருகும்.

## இயற்கை வைத்தியமும் கடவுள் பக்தியும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையை கடவுள் நினைவோடு நடத்துகையில் நமக்கு கடவுளின் அருளும் கிடைத்துவிடுகிறது.

### நோய் நீங்குவதற்கு வழி

துளசிதாஸர், 'மனிதன் சோம்பேறியாகையால் அவனை நோயும் வியோகமும் (பிரிவும்) சேர்ந்து வதைக்கின்றன' என்று சொல்லியிருக்கிருர். ஆயுள் முடிந்தவர்கள் இறந்து போகிருர்கள். அவர்கள் பிரிவு இருப்பவர்களை வதைக்கிறது. சிறு வயதில் பையன் இறந்து போனுனென்ருல் அவன் பெற்ரேருக்கு துயரம்தாளுவதில்லை. நோயும் வியோகமுமாக மக்களைப் படுத்தும்அல்லல்கொஞ்சமல்ல. இதற்குக் காரணம்' 'ஏபகவானே! உனது சரணகமலங்களை நினையாததே' என்கிருர் பக்தர்.

காந்தியடிகளும் இறுதியில் ராமநாமமே நோய்நீங்க சிறந்த உபாயம் என்று சொன்னுர். இறுதிக்காலத்தில் அவர் மருந்துகளும் உபசாரங்களும் வேண்டாமென்று சொல்லிவிட்டார். அவரே அதற்கு முன்பு பலவிடங்களில் ஆஸ்பத்திரிகள் திறந்திருக்கிருர். அவைகளிலெல்லாம் பலவிதமான மருந்துகள் அளித்துவருகிருர்கள். இயற்கை வைத்தியம் செய்கிறவர்களிடமும் கடவுள் பக்தி காணப்படவில்லை. இயற்கை வைத்தியர்கள் கடவுளை நினைப்பதாகவே சொல்ல முடியவில்லை. இதனல் அவர்கள் செய்யும் வைத்தியமும் பயனளியாது போகிறது. முக்கியமான விஷயம் இல்லை என்ருல் நோய் எப்படித் தீரும்? சித்தத்தில் கடவுளின்பக்தி இருக்கவேண்டும். அதோடு கூட சிகிச்சையும் சேருகையில் நன்மை ஏற்படுகிறது. கடவுள் நினைவே முக்கியம். அதோடு கூட உணவை ஒழுங்குபடுத்தவும், உடலைத் தூய்மையுறச் செய்யவும் வேண்டும்.

ஞாயிறு கதைமலர்:
சித்திரை மல்லிகை
'சித்திராபூரணை'
அடுத்த இதழ் முதல் வெளியாகிறது

# தொடர் யாத்திரிகன் கதை

**"நீலாம்பரி"**

வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நோயாளி ஒரு முக்கால் மணி நேரத்துக்குள்ளாக எங்களிடம் மீண்டார். நாலு பேராகப் பிடித்து தூக்கி காரில் ஏற்றி விடும் நிலைமையில் வைத்திய சாலை சென்ற அவர் திரும்பி வரும்போது காரின் கதவைத் தாமே திறந்து கொண்டு திறந்த கதவை மறுபடி படார் என்று அடித்துச் சாத்திவிட்டு சர்வசாதாரண மனிதராக நம்மை நோக்கி நடந்து வந்தார். அப்பொழுது நாமனைவரும் அவரைப்பார்த்து வியப்பில் ஆழ்ந்து நின்றோம். நாம் எதை எண்ணி வியப்பது, இந்த விநோதமான ஆஸ்த்துமா நோயைப்பார்த்தா அல்லது விந்தையான நவீன வைத்திய சிகிச்சையை எண்ணியா அல்லது கோடி கோடி இன்பத்தையும் துன்பத்தையும் அருகருகே பிணைத்து வைத்திருக்கும் இறைவனின் அற்புத லீலா விநோதத்தை நினைத்தா?

ஒரு வகையில் இதுவும் கதிர்காமக் கடவுளின் அருளாகவிருக்குமோ? ஏனெனில் நோயாளியான சிற்றம்பலத்தின் தகப்பன் கிழவனர் வழக்கத்தில் சற்று தீவிர பிடிவாத சுபாவமுள்ளவராம். அதனால், இந்த முக்கியமான தருணத்தில் தொய்வு நோயானது அதன் முழுவேகத்துடன் அவரை ஒரு தாக்குத் தாக்கி உலுப்பி விட்டவேளை அவரது பிடிவாத குணம் தளர்ந்து மனம் நெகிழ்ந்து சிற்றம்பலத்தின் கல்யாணத்தை கோவிலில் வைத்தே நடத்தி முடித்து விட முழுமனதாக சம்மதித்து விட்டார். இல்லாது போனல் அவரது முழுமனச் சம்மதத்தைபெற்று அவரை முன் வைத்தே கல்யாணத்தை நடத்திமுடித்துவிடுவதென்பது இப்போதைக்கு நடைபெறக் கூடிய காரியமாயிருக்காது. சிற்றம்பலத்தின் சேதி செவிக்கெட்டியது முதலாக "இவன்களெல்லாம் தாங்கள் நினைத்த மூப்புக்கு நடக்கத் தலைப்பட்டு விடுகிறதென்றால் அப்படியே நடந்து கொள்ளட்டும்" என்று மனங்கறுவிக் கொண்டிருந்த மனுஷன், ரயிலேறி கொழும்பு சேர்ந்து பின் அங்கிருந்து கதிர்காமம்வந்து சேர்ந்த பிற்பாடும் வாய் திறந்து ஒன்றும் சொல்லாமலே இருந்தார். பெண்ணைப் பார்த்த பிற்பாடு கூட அவளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துக் கொண்டுபோகும் எண்ணம் அவரிடம் ஏற்பட்டிருந்ததே அல்லாமல் அதற்கு மேல் கதிர்காமத்தில் சட்டுபுட்டென்று கல்யாணத்தை நடத்தி முடித்து விடும் யோசனையோ அல்லது மகனையும் மருமகளையும் கொழும்பிலேயே குடித்தனம் செய்ய விட்டு வந்தவழியைப் பார்த்துத் திரும்பும் எண்ணமோ உண்டாகியிருக்கவில்லை. அவர் வீட்டிலிருந்து புறப்படதே, சிற்றம்பலத்தின் தாயும் தங்கையும் சேர்ந்தாற்போல் நின்ற நிலையில் அவர்களைத் தன்னந்தனியே எதிர்க்கும் ஆற்றலற்றவராக 'எதற்கும் ஒருக்கால் நேரில் போய் பார்த்து பின் முடிவு செய்யலாம்' என்றதீர்மானத்துடனே தான்.

இரண்டுவேளை தொய்வு கடுமையாகத் தாக்கிவிடவே, அந்நிய தேசத்தில் அகாலமாய்ச் செத்துக் 'கித்து' சீரழியாமல் பத்திரமாக வீட்டுக்கே போய்ச் சேர்ந்து விடுவோம் என்ற கவலை தொட்டதோ என்னவோ, "என் சீவியம் இன்றைக்கோ நாளைக்கோ இப்படித்தான் ஒருநாள் மின்னுமல் முழங்காமல் ஆகப் போகுது. ஆதலால் முதல் கடவுள் அடுத்தபடி நீங்கள் முன்னின்று அவனுடைய காரியத்தை என் கண்முன்னால் நடத்தி வைச்சிடுங்கோ சுவாமியார். நாங்கள் யாருக்கும் எப்பொழுதும் ஒரு தீமையும் செய்ததுகிடையாது. ஆனதால் ஆண்டவன் எங்களுக்கு ஒரு தண்டனையும் அளிக்குமாட்டார்" என்று ஊசி போட்டுக கொண்டுவந்த அன்றைய இரவே கூறி வாக்குக்கொடுத்துவிட்டார் சிற்றம்பலத்தின் தகப்பனர் பொன்னம்பலம்.

கதிர்காமக் கந்தரநுபூதி பெற்று வெளிப்போந்து இவ்வாறு ஒரு சாதனையை நிலைநாட்ட உதவிய நோயின் புகழைப்பாடுவதற்கு என்னை இன்னும் கொஞ்சம் அனுமதிப்பீர்களாக, நேயர்களே!

ஆஸ்த்துமாநோய் பெண்களை விட ஆண்களைத்தான் அதிகமாகப் பீடிக்கிறதாம். எந்த வயசிலும் இந்நோய் தோன்றும். ஆனல் பெரும்பகுதியும் குழந்தைப் பருவத்திலும் வயசான பிற்காலத்திலுமே தான் தோன்றுகிறது. தொய்வு—நொய்தல், அதாவது உடல் வலிவு தளர்ச்சியுற்று முதுமைக் காலத்தில் ஏற்படுவது. முற்காலத்தில் அப்படித்தான் அதற்கு வியாக்கியானம் செய்தார்கள். ஏன்—இன்றைய நவீன வைத்திய ஆராய்ச்சி கூடக் கண்டறிந்திருப்பதும் இதுதான். அதாவது நரம்புச் சோர்வு என்கிறார்கள். வயசான காலத்தில் வீட்டின் ஒரு மூலையில்கிடந்து குறட்டை விடுவதுபோல தங்கள்பாட்டில் அநுபவிப்பார்கள். மிஞ்சிப் போனல் அவர்கள்நோய் அவர்களுக்குத் தெரிந்த 'கைமருந்து'களுக்கு அப்போதுக்கப்போது கட்டுப்பட்டு நின்றது. நவீன ஊசிமருந்து வகையராக்கள் ஒன்றும் கிடைக்காத காலம் அது. பச்சிலை மூலிகளே கைகண்ட மருந்தாகஉதவின. புகையிலைச் சுருட்டுப் பிடித்தல், கடுங்கோப்பி, கோப்பியில் உப்புப் போட்டுக்குடிப்பது, நாட்டுச் சாராயம், இஞ்சி, மிளகு, சுக்கு—இவைகளே பனிக்காலத்தோடும் குளிர்காலத்தோடும் வந்து ஒட்டிக்கொள்ளும் ஆஸ்த்துமாவை அப்போதைக்கப்போ துரத்தியடிக்க போதுமானதாயிருந்தது. எங்கேயாவது நூறில் ஒன்று ஆயிரத்தில் ஒன்ருக இளமையில் ஏற்படும் நோய்க்கு அந்நாளில் ஊரெங்கிலுமிருந்த சிறந்த தமிழ்வாகட வைத்தியர்கள் [illegible]பங்களும் கஷாயங்களும் எண்ணையும் தயாரித்து நோயாளிகளை நீடித்த பத்தியத்தில் போட்டு புடமிட்டு நோயை அறவே களைந்து எடுத்துவிடுவார்கள்.

இன்றைக்கோ நம்மைச் சுற்றிலும் காற்றே கெட்டுப் போயிருக்கிறது. எங்கும் ஒரே தூசு, புழுதி. அதற்கடுத்தபடி நமது உணவு ஆகாரங்களிலும் எவ்வளவோ புது மாற்றங்கள். பழைய ஆசார, ஒழுங்குகள் நம்மிடமிருந்து விடைபெற்று வருகின்றன. போதிய உடற்பயிற்சி கிடையாது. நெஞ்சில் உரமில்லை. சுவாசக் குழாயில் கோளாறு ஏன் உண்டாகாது? சுவாசப் பையிலும் இருதயத்திலும் ஏன் நோய் பீடிக்காது?

சுவாசக் குழாயில் ஏற்படும் ஒரு மாறுதல் நிலை தான் தொய்வு என்ற இந்த பொல்லாத சுவாச அவஸ்தைக்குக் காரணமாக அமைகிறதாம். நவீன மேற்கத்திய வைத்திய சாஸ்திர விற்பன்னர்கள் ஆராய்ச்சி செய்து முடிவில் இப்படித்தான் சொல்லுகிறார்கள்.

சுவாசப்பையுடன் சம்பந்தப்பட்ட நரம்புகளின் ஒழுங்குக் கிரமமான இயக்கம் சில சமயங்களில் தளர்ந்து விடுவதால் சுவாசக்குழாய் அப்பொழுது சுருக்கமடைந்து அதனால் ஒருவர் மூச்சுத் திணறுவதுதான் ஆஸ்த்துமா எனப்படுமாம்.

தளர்வடைந்துபோயிருக்கும் நரம்புகளுக்கு வலிவூட்டி மறுபடி இயங்கவைத்து சுருங்கிப் போன சுவாசக்குழாயை திரும்பவும் விரிவுபடுத்தி விட வழி

(9-ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா

## திருந்தியசிறுவன்

— தையல் இராஜரத்தினம் —

பாலு ஒருதுஷ்டப் பையன். அவனுடன் சிறுவர்கள் சேர்ந்து விளையாடுவதற்கு மிகவும் அஞ்சுவார்கள். பாடசாலைக்குச் சென்ருல் சிறுவர்களோடு சண்டை செய்வான். சிறு பிராணிகளைக் கண்டாலோ அவற்றையெல்லாம் பிடித்துத் துன்புறுத்துவான். வீதியிலே பிச்சைக்காரர்களைக் கண்டால் அவர்களைக் கேலிசெய்து பல தொல்லைகளைக் கொடுப்பான். அவன் பெற்றோர்கள் புத்திமதி சொன்னலும் செவிசாய்க்க மாட்டான்.

ஒருநாள் அவன் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது வாசலில், "அம்மா பிச்சை" என்று ஒரு குரல் கேட்டது. பாலுவின் தாயார் வீட்டின் பின்புறத்தில் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். எனவே பாலு வாசலைநோக்கி ஓடினன்.

அங்கே பரட்டைத் தலையுடனும் அழுக்கு உடையுடனும் ஒரு பிச்சைக்காரன், கையில் பாத்திரம் ஏந்தியபடி நின்றன். பாலு மெதுவாக அவனருகில் சென்றன். பிச்சைக்காரன் தனது பசியை கையினல் சைகை காட்டி அவனுக்குத் தெரிவித்தான். இரக்கமற்ற பாலுவோ மெதுவாகக் குனிந்து மண்ணை வாரிஅள்ளி அவன் பிச்சைப் பாத்திரத்திற்குள் கொட்டினன். அப் பிச்சைக்காரனே வேதனையுடன் தன் பாத்திரத்தைக் காலி செய்துவிட்டு அவ்விடத்திலிருந்து அகன்றன்.

பாலு அவன் போகும் திசையைப் பார்த்துவிட்டு அவனைப் பின் தொடர்வதற்காக வீதியைக் கடந்தான். அப்பொழுது வாயு வேகத்தில் வந்துகொண்டிருந்த கார் ஒன்று திடீரென "பிரேக்"கை அழுத்தி நின்றது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அதிர்ச்சியினல் பாலு மூர்ச்சையுற்று நிலத்தில் வீழ்ந்தான். ஆனல் அதிர்ஷ்டவசமாக அவனுக்கு ஒருவித காயமும் ஏற்படவில்லை.

இதை அவ்வழியே சென்ற பிச்சைக்காரன் கண்டு ஓடி வந்து அவனைத் தன் கையில் தாங்கி பிறருதவியுடன் தண்ணீரெடுத்து முகத்தில் தெளித்தான். சிறிது நேரத்தில் மூர்ச்சையுற்ற பாலு கண்விழித்துப் பார்த்தான்.. என்ன ஆச்சரியம்! தான் அவமரியாதை செய்து அனுப்பிய பிச்சைக்காரனே தன்னைத் தாங்கி வைத்திருப்பதைக்கண்டு நாணமடைந்தான்.

பிச்சைக்காரன் அன்புடன் "தம்பி என்ன செய்கிறது?" என்று கேட்டான். பாலுவின் நாவோ நாணத்தினலும் நன்றிப் பெருக்கினலும் பேச எழவில்லை. மெதுவாக அவன் அணைவிலிருந்து விடுபட்டுத் தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டி, அவனையும் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று பசியாற உணவளித்து வழியனுப்பி வைத்தான்.

இதன் பின்பு பாலு மிகவும் நல்லவனாகமாறி எல்லோரிடமும் நல்லபெயர் பெற்றுக் கொண்டான்.

# கோகலேயும் காந்திஜியும்

— எஸ். கே. ரி. —

நாட்டிலேசமயத்தைவளர்க்கவும் நாட்டின் சுபிட்சத்திற்காகப் பாடுபட்டு அவ்வப்போது செயலாற்றி ஆவன செய்யவும் தேசங்களிலே பலர் தோன்றுகிறார்கள். சரித்திரம் இப்படிப் பட்டவர்களில் ஒரு சிலரையே தன் பந்தியில் சேர்த்துக் கொள்ளுகின்றது. இந்த வரிசையில் பலர் பாரதத்தின் உயர்ச்சிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டு இருக்கின்றார்கள். இவர்களுள் உண்மையுணர்ச்சியுடனும் சிறந்த முறையிலும் அயராது உழைத்தவர் கோபால கிருஷ்ண கோகலே. இவர் மறைந்து இன்று 49 ஆண்டுகள் ஆகின்றன. இவருக்கும் காந்திஜிக்கும் இடையே மிக அன்னியோன்ய உறவு இருந்தது.

முதலாவதாக கோகலே 1896-ம் ஆண்டிலே காந்திஜியைச் சந்தித்தார். அதன் பின்னர் காந்திஜியின் கொள்கைகளையும் தத்துவங்களையும் நாளடைவில் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இதன்பின்னர் காந்திஜியுடன் அடிக்கடி சந்தித்துப் பழகி வரலானர்.

இப்படியான சந்தர்ப்பங்களுக்குப் பின்னர் ஒருநாள் காந்திஜி கோகலேயைப்பற்றிப் பகிரங்கமாகப் பின்வருமாறு கூறினர்: "கோகலே எனது அரசியல் குரு." இதிலிருந்து கோகலேயைக் காந்திமகான் எப்படி நேசித்தார் என்பறு புலனுகின்றது.

ஒருமுறை வட ஆபிரிக்காவிற்குச் சென்றிருந்த சமயம், கோகலே ஒருவிருந்திற்குச் செல்லவேண்டியிருந்தது. அதற்கு அணிந்து செல்வதற்கு அவரது பெரும் செல்வமாக மதிக்கப்பட்ட உத்தரீயம் உடனடியாக அணியமுடியாத முறையிலிருந்தது. அப்பொழுது அவருடன் இருந்த காந்திஜி அதனைத்தான் கழுவித் தருவதாகக் கூறினர். அதற்கு கோகலே, "நான் உங்களை நல்ல வக்கீல் என்ற முறையில் நம்புகிறேன்; சலவைத்தொழிலாளி என்ற வகையில் நம்பவில்லை" என்று பதிலளித்தாராம். ஆனல் காந்திஜியாவிடுவார்? அந்த உத்தரீயத்தைக் கழுவி நல்ல சலவைத்தொழிலாளி என்ற நற்சாட்சிப் பத்திரத்தையும் பெற்ருர்.

ஒருநாள் புகைவண்டியில் முதல் வகுப்பில் கோகலே பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு ராணுவஅதிகாரி அவர் இருந்த பெட்டிக்குள் ஏறிக்கொண்டார். கோகலேயைக் கண்டதும், தானே அந்தப்பெட்டிக்குள் பிரயாணம் செய்யவேண்டுமென்ற நோக்குடன் அவரது பொருள்களையெல்லாம் தூக்கி வெளியில் வீசினர். பின்னர் கோகலே யாரென்று தெரிய வந்ததும் மன்னிப்புக்கோரி அத்துடன் வெளியில் போட்ட பொருள்களையும் உள்ளே கொண்டுவந்து சேர்த்தாராம். அதன் பின்னர் கோகலே கூறினர்:" ஒருவரைத் தண்டிப்பதனல் நம் ஒரு காரியத்தைச் சரிப்படுத்திவிட்டோம் என்று எண்ணுவது தவறு. சாதி இறுமாப்பும்அகந்தையும், தாங்கள் பிறரைவிட உயர்ந்தவர்கள் என்ற ஒரு எண்ணமும் வெள்ளையர்களின் அரசாட்சியால் வளர்க்கப்பட்ட ஒரு வித்தாகும். இதை நாங்கள் தடுக்காவிட்டால் இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெறும்."

கண்டாக்டர்:- கண் நன்ருகத் தெரியவில்லையா? இதோ, இந்தப்புறமாக வாருங்கள். சரி, இனி, உட்காருங்கள். உட்கார்ந்தீர்களா? தலையை நிமிர்த்தி நேரே பாருங்கள். அதோ அந்தப்பலகையிலிருக்கும் எழுத்துக்களை முதலிலிருந்து படியுங்கள், பார்க்கலாம்.

நோயாளி:- பலகை எங்கே இருக்கிறது, டாக்டர்?

அனுப்பியவர்:-

இரா. தர்மலிங்கம்,
கோவில் தெரு,
நெடுந்தீவு.

## வாணி தரிசனம்

—"சித்தாண்டித்தில்லை"—

வெள்ளைக் கமலத்துறை
- தேவி என்
உள்ளக் கமலத்திலே
பள்ளி கொண்டே
யுறைய - ஒரு நாள்
வெள்ளெனக் கனவு
கண்டேன்:

•

பஞ்சணை மெத்தையினை
- ஒத்ததொரு
பச்சை வெளிதனிலே
இங்கிதமாயிருந்தேன்
- தனிமையில்
எங்கிருந்தோ ஒருத்தி,

•

வெள்ளை மலர்ப்பாயில்
- நடந்தே
வீணையை மீட்டி
வந்தாள்
உள்ளக் கருத்ததனை
- எழுதிய
ஓலைச்சுருள் கொடுத்
தாள்.

•

நான் முகன் தேவியவள்
- தமிழ்க்கலை
ஞானத்துறைதேவி
தேன் மொழிவாணி
யவள் - எனக்குத்
தீங்கவி ஏடளித்தாள்.

•

அசைந்த தென்றலிலே
- மணமாய்
கலந்து வந்த அவள்
பரந்த தமிழினிலே
- கவிதைகள்
பாடவரங் கொடுத
தாள்.

**மோட்டோர் வண்டி உரிமையாளருக்கு ஒரு நற்செய்தி!**

உங்கள் மோட்டோர் வண்டிகளுக்கு வரும் பிழைகளுக்கு குறைந்த செலவில், குறுகிய காலத்தில், நம்பிக்கையும் உத்தரவாதமும் தரக் கூடிய சிறந்த சேவைக்கும்

வண்டிகள் விற்பனைக்கோ அல்லது வாங்கவோ வேண்டுமா?

இன்றே நாடுங்கள்

**வின்ஸ்லோஸ்**

**ஓட்டோ மோபைல் என்ஜினியர்ஸ்**

மின்சார நிலைய வீதி, [போன்: 269] யாழ்ப்பாணம்.

**WINSLOWS Automobile Engineers**

Power House Road, Jaffna.

பொறியியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மேற்பார்வையில் பயிற்றப்பட்ட திறமை வாய்ந்த உதவியாட்களின் உதவியுடன் சிறந்த சேவை செய்து வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஞாயிறு கதை மலர்

## ஒரு தேர்தல் கதை

# அபேட்சகர் அம்பலத்தார்

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

மண்மாதாவின் மகிழ்ச்சிப் புன்னகையுடன் காலை புலர்ந்தது. இரவு, கமக்காவலுக்குச் சென்றிருந்த நான் வீட்டுக்கு வந்தேன்.

கொஞ்சம் சுடச்சுட தேநீர் குடித்தேன். சற்றுநேரம் சிரமபரிகாரம் செய்தேன். மீண்டும் கமத்திற்கே போகவேண்டியிருந்தது.

காரணம், கமத்திற்குத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது. குளத்திலே தண்ணீர் குறைந்த கோடைகாலம். ஒறுப்புத் தண்ணீரை ஒவ்வொருவருடைய கமத்திற்கும் 'முறை' வைத்துத்தான் விநியோகித்தார்கள்.

நான் பயிர்ச்செய்கை பண்ணியிருந்த கமத்திற்கு பதினறு மணித்தியாலங்களில் தண்ணீர் பாய்ச்சி முடிக்க வேண்டும்.

குறிக்கப்பட்ட நேரத்தில் என் வயலுக்குப் பாயவேண்டிய தண்ணீர், எனது கவனயீனத்தினால் வியர்த்தமாக தரிசு நிலங்களிலே பாய்ந்துவிட்டால்—அவ்வளவுதான்!

விழலுக்கு நீர் பாய்ச்சிய அந்தப் பொன்னான நேரத்திற்குப் பதிலாக மீண்டும் தண்ணீர் பாய்ச்ச முடியாது. கண்டிப்பாக மற்றவர்கள் அநுமதிக்க மாட்டார்கள்.

மனிதனுக்கு நாளாந்தம் பற்பல கடமைகள் குறுக்கிடலாம். அவைகளில் ஒன்று முக்கியமான முதற் கடமையாயும், மற்றவைகள் அடுத்தபடியாகவுந்தான் அமைந்திருக்கும். முக்கிய கடமையை முதலிலும் மற்றவைகளை அடுத்தும் செய்து நிறைவேற்றுகிறவர்கள தாம் வாழ்க்கையில் வெற்றி காண்கிறார்களென்பது அநுபவர் தந்த படிப்பினைதானே!

அன்று, பலகடமைகள் இருந்தன. தண்ணீர்ப் பாய்ச்சல்தான் முதற்கடமையாயிருந்தது. எனவே, கமத்திற்குப் புறப்பட்டேன்.

அவ்வேளையில்...

'அம்பலம் அம்மான்'கையிலே ஒரு கடதாசிச் சுருளுடன் என்னைத்தேடி வந்தார்.

"வாருங்கள் அம்மான்! ஏதும் அலுவலா?" - வரவேற்று விசாரித்தேன்.

"ஓம்ராசா! இந்த இடாப்பையொருக்கால் எழுதித்தா தம்பி!"—அவர் பதில் பகர்ந்தார்.

"மத்தியானம் போலே எழுதினாலென்னம்மான்...? வயலுக்குத் தண்ணீர் பாயுது..." —நான் மறுக்காமல் மறுத்தேன்.

"இண்டைக்குக் காலமை கட்டாயமாய்க்கொண்டரச் சொல்லி விதானை சொன்னவன் ராசா! நேரஞ் செல்லாது ...... இரண்டெழுத்துத்தானே! கிறுக்கிவிடு அப்பு!"—அவர் வற்புறுத்தாமல் வற்புறுத்தினார்.

அதற்கு மேலும் மறுப்பது அழகல்லவென்று இடாப்பை வாங்கி நிரப்பினேன். பிரதானகுடியிருப்பாளர்கையொப்பம் போடவேண்டிய இடத்தைச் சுட்டிக்காட்டினேன். வழமைப்படி 'விரற்சீல்' அடித்தபின் இடாப்பையும்கூப்பன் சளையும் அம்பலம்மான் வாங்கிக் கொண்டார்.

"நீ வயலுக்குப் போகவேணுமெண்டு பறக்கிறாயப்பு! போய்வா. தம்பியை ஆறுதலாகக்...காணவேணும்! ஒரு அ...லு...வ...ல்..."—அவர் வசனத்தை ரப்பராக்கி, நோய்ச்குணமின்றியே தலையையும் சொறிந்து காட்டினார்.

"அப்படியென்றால் பின்னேரம்...?"

"...கட்டாயம் வீட்டை வா ராசா! இப்ப உதிலை கொஞ்சம் வந்திட்டுப்போ..."—சிரசாலே 'சிக்னல்' காட்டி சிறிது தூரம்—அதாவது படலையடி வரையும் அழைத்துக்கொண்டு போனார்.

நிலத்தைக் காற் பெருவிரலாற் கிளறிக் கிளறி, கண்களை ஏறச்செருகி, நேருக்கு நேர் பார்க்காமல் எங்கேயோ பார்த்த வண்ணம், வியர்த்து விறுவிறுத்து, மரணவேதனைக்கு ஒத்திகை நடத்தி, குரலில் பீதியைத் தேக்கியவராக—

"நானும் இந்தமுறை 'நொம்பர்' வேலை கேக்கிறன் ராசா... நேற்றுக் காசும் கட்டிப்போட்டன்" என்று சொன்னார்.

அவர் எமது வட்டாரத்துக்கு ஒரு அங்கத்துவ அபேட்சகராக கி. ச. தேர்தலில் போட்டியிடப் போவதைத்தான் இயன்றவரை சுருக்கி, 'வீ. சி. மெம்பர்' என்ற ஆங்கிலப் பதத்தை 'நொம்பர்' ஆக்கி அப்படிச் சொன்னாரென்று ஊகித்துக்கொண்டேன்.

"என்னம்மான் உங்களுடைய கதை...? நம்மூரில் போட்டியே வேண்டாமென்றல்லவா அன்றைக்கொரு பொதுக்கூட்டம் கூடி சுந்தரத்தை ஏகமனதாய்த் தெரிவுசெய்துவிட்டோம். ஏன் நீங்களுந்தானே அந்தக் கூட்டத்திலிருந்தீர்கள். அப்படியென்றால், உங்களுடைய விருப்பத்தைக் கூட்டத்திலே சொல்லியிருக்கலாமே!

"போனதடவை 'துரைராசா'வை அனுப்பினோம். அதற்கு முதல்முறை 'ஐயாத்துரை'யை விட்டோம். இந்த முறை சுந்தரம். அடுத்தமுறையும் அப்படித்தான். சிலபோது உங்களையே அனுப்பவுங்கூடும். பொதுநலசேவைக்குத் தகுதியான ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். அளிக்கும் வருகிறோம். ஒருபதவியை ஒருவரே சதாகாலமும் பார்க்கவேண்டுமென்கிற காலந்தான் மலையேறிவிட்டதேயம்மான்!

"பணத்தாலும் மதுவாலும் வாக்குரிமையை கொள்வனவு-விற்பனவுபண்ணி திறமைக்குச் சமாதிகட்டுவதற்காக 'தேர்தல் போட்டிமுறை'யைப் பயன்படுத்துவதிலும் பார்க்க நமது முறை சிறந்ததல்லவா அம்மான்! ஈழநாட்டின் ஸ்தலஸ்தாபன ஆட்சிச் சரித்திரத்திலேயே நம் வட்டாரத்துக்கு இதுவரையில் தேர்தல் போட்டி நடைபெறவில்லையேயம்மான். அதையேன் நீங்கள் புதிதாக உண்டாக்குகிறீர்கள்? போட்டிமூலம் தெரிவுசெய்தாலும் ஒருவரைத்தானே தேர்ந்தனுப்புவோம். அந்தத் தெரிவை போட்டியில்லாமலே தெரிந்துவிட்டால் நேரமும் பணமும் மிச்சப்படுவதுடன் ஊரில் பகைமையும் வளராதல்லவா!

"நீங்கள் போட்டிபோடுவது சரியில்லையம்மான். காசு கட்டினால் பரவாயில்லை. நியமனபத்திரத்தைத்தாக்கல் செய்யாமல் விட்டுவிடுங்கள். நான் சொல்லுவதில் பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய அறிவுக்கெட்டியவரையில் சிந்தித்துப்பாருங்கள்... இம்மாதிரி வேலைகளுக்கு சிறிதளவாவது படிப்பும் உலக அநுபவமும் உள்ளவர்கள்தான் போகவேண்டும். இன்னுஞ் சிறிது விளக்கமாகச் செல்வதென்றால்... ஒரு கிராமச்சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் எல்லா அங்கத்தவர்களுமே கிராமச்சங்கத் தலைவர் பதவியை வகிக்கத் தக்க தகுதியுடையவர்களாயிருக்க வேண்டும். அப்படியென்றால்தான் அந்தச் சங்கத்தில் ஊழல்கள் தலைகாட்டாமல் நிர்வாகம் செவ்வனே நடைபெற்று கிராமங்கள் நலமடையும்..."

—ஒரு குட்டிச் சொற்பொழிவாற்றிவிட்டு அம்மானின் அபிப்பிராயத்தை எதிர்நோக்கினேன். அம்மான் பேச்சை ஆரம்பித்தார்:

"அப்பிடிச் சொல்லாதை ராசா! படிச்சவங்களெல்லாம் இப்ப என்னத்தையப்பு வெட்டி நட்டவங்கள்......? வெண்டாலும்சரி தோத்தாலுஞ்சரி...எனக்கும் ஒரு ஆசையாய்க் கிடந்துது..."

"சரி! எப்படியோ நீங்கள் அங்கத்தவராகி விட்டீர்களென்று வைத்துக்கொள்வோம். உங்களாலே 'சேமன்' வேலை பார்க்கமுடியுமோ?"—எனது முயலுக்கு மூன்றே கால்களென்று பிடிவாதம் பண்ணிய அம்மான், எனது கேள்விக்கு சரியான பதிலிறுக்காவிடினும் சப்பைக்கட்டுப் பதிலாவது தரமுடியாமல் திக்குமுக்காடினார்.

"சரி! எல்லாத்துக்கும் பின்னேரம் வீட்டுக்கு வருகிறேன்... ஆறுதலாகக் கதைப்போம்" என்று அவரையும் அனுப்பிவிட்டு நானும் கமத்திற்குப் போனேன்.

∴ ∴ ∴

ஆயிரம் முட்டைகளிட்டுவிட்டும் ஆர்ப்பாட்டம் பண்ணாத ஆமையாக, தானுண்டு தன் கருமமுண்டென்று அடங்கி வாழ்ந்த அம்பலம் அம்மானையே ஆட்டும் பொழுது தான் 'பதவியாசை'யின் பரிபூரணவடிவந்தெரிகிறது.

அவரின் ஆசை, வன்னிநாட்டிலேயே ஒற்றுமையுள்ள கிராமமென்று பெயரடிபட்ட எங்கள் ஊரின் மானத்தையல்லவா வாங்கப் பார்க்கிறது. எந்தப் பிரச்னைகளையும் துப்பாக்கிமுனையிலே குண்டுவீசித் தீர்க்கமுனையும், போட்டியும் பொறாமையும் நிறைந்த நாகரிக மனிதர்கட்குச் சவால் விடுவதைப்போல, ஒற்றுமையின் சிகரத்திலே கூட்டுறவுக்கோர் முன்மாதிரியாகத் திகழ்ந்துவரும் நம் சிற்றூரின் ஒற்றுமையையல்லவா சின்னபின்னமாக்கப் பார்க்கிறது...

அம்பலம்மானின் நெஞ்சில் முகிழ்த்த இந்தத் தகாத ஆசைக்கு எந்தச் சுயநலப் புலிகள் வித்திட்டு வேடிக்கை பார்க்கிறார்களோ?

—வயலுக்குத் தண்ணீர் பாய்கிறவரையிலும் இவ்வண்ணமான சிந்தனைக் குமிழிகள் என்மனக்குளத்திலே தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

∴ ∴ ∴

அன்றுமாலை சுமார் எட்டு மணியளவில் அம்பலம்மானின் வீட்டுக்குச் சென்றேன். நான் 'கேற்'றடியில் போகும் பொழுதே, அம்மானுக்கும் மாமிக்குமிடையில் பலத்த விவாதமொன்று நடைபெறப்போகிறதென்பதை அவர்களின் ஆரம்பமொழிகள் கட்டியங்கூறின.

அம்பலம்மானின் ஆசையின் பிறப்பிடத்தையும் அடிப்படைக்காரணத்தையும் 'அந்த விவாதம் வெளிப்படையாக்கப் போகிறதென்பதை - நூலின் பாயிரமாக - அவர்கள் முன்னுரை முரசறைந்தது.

எனக்கு என்றுமே ஒற்றுக் கேட்கும் பழக்கமில்லையென்ற பொழுதிலும், நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சந்தர்ப்பம் ஒற்றுக் கேட்க வைத்தேவிட்டது. ஓர் ஒதுக்குப் புறமாக கரந்துறைந்து கொண்டேன். அவர்களின் சர்ச்சை தொடங்கியது...

"காலமை கோழி கூவப் போன நீ இவ்வளவு நேரமும் என்னனை செய்தாய்?"

"நான் ... பழைய விதானையாரைக் கண்டாப் போலை... அவர்..."

"எந்தப் பழைய விதானையாரெணை?"

"எந்தப் பழைய விதானையார்—? கந்தனெண்டகறுத்தப் பழைய விதானையார் — நம்மடை குணுவாயில் பழைய விதானையாரை அவவுக்குத் தெரியுமெண்டோ ..."

"குணுவாய்ப் பழையவிதானையார் என்னனை மொட்டந்தலைக்கு முடி சூட்டினவர்—இல்லைக்கேக்கிறன?"

"இஞ்செர் கோவியாதை... கதையைக் கேளு! கேட்டுப் போட்டுப் பேந்து..."

"சரி சொல்லு!"

"அவர் என்னை 'நொம்பர்' வேலை கேக்கச்சொல்லி முந்தநாத்து ஒரேபுடியாய்ப் புடிச்சிட்டார். நானும் முகம்மறுக்க ஏலாமை வாக்குக்குடுத்திட்டன். ஏன் - உனக்கு ஒளிக்க வேணுமே? நேத்துக் காசும் கட்டிப்போட்டன்..."

"உனக்கேனணை உப்பிடி மூளை கெட்டுது? சொல்லுவார் சொன்னால் கேப்பாருக்கு மதியென்னணை...? அண்டைக்கெல்லோ ஊராக்களெல்லாமொத்து அவன் சுந்தரப்பொடியனைப் போட்டியில்லாமை தெரிஞ்சுவிட்டவை. இப்ப நீ போட்டிபோடப் போறனெண்டால், அவனோடையில்லை - ஊரவையோடைதான் போட்டி போடப் போறாய்! நல்லாய் யோசிச்சுப்பார்... ஒரு துண்டு உனக்குப் போடுவினமே? நீ வெண்டாப் போலைதான்..."

"போட்டி போடத்தான்ரி போறன். இந்த முறை நான் சுந்தரனை வெல்ல இல்லையெண்டால் - உன்ரை காலுச் செருப்பாலை அடி! ஊரவங்கள்புடுங்கி அடுக்கிறதையும் பாப்பமே! ஒரு துண்டுக்கு நூறுஉறுவா குடுத்தெண்டாலும் வெல்லத்தான் போறன்ரி சின்னாச்சி! இருந்துபார் உன்ரை சின்னக் கண்ணாலை...!"

"அது சரியெணை! உனக்கேனுந்த ஊர்ப்பொல்லாப்பு? நூறு உறுவாவெண்ணுறாய் ... நூறு செப்புச்சல்லி உன்னட்டைக் கிடக்கேயெணை? பழைய விதானை உன்னைப் பேய்க்கூத்து ஆட்டுறான்; நீயும் ஆடுறாய்; ஆடு! ஆடு! ஆடி அரங்கேத்து..."

"அந்தாளை உனக்குத்தெரியாதடி... அந்தாள் தங்கக்கம்பி. மூந்தநாத்தும் நேத்தும் இண்டைக்கும் - எனக்கு மட்டும்- மூண்டுபோத்தல் சீலெடுத்துத் தந்தவர். நேத்துச் சுப்பனுக்குஞ் செல்லனுக்கும் தலைக்கு இருவத்தஞ்சு உறுவாக் குடுத்துத்தான் எனக்கு உதவிக்கு விட்டவர், காசு கட்ட. 'ஒரு துண்டுக்கு நூறல்ல ஆயிரம் வந்தாலும் சிலவழிச்சு உன்னை நொம்பராக்காட்டி, நான் முத்துவேலற்றை மகன் ராமலிங்கமில்லை. நீ இதொண்டையும் இருந்துபார் அம்பலம்' எண்டு பெத்த புள்ளையின்ரை தலையிலையடிச்சுச் சத்தியம் பண்ணுறான் மனிசன்..."

"போனகிழமை புள்ளையள் பசியிலை கிடந்து சாகேக்கை, கூப்பனெடுக்க வழியில்லையெண்டு, ஒரு மரக்கால் நெல்லுத் தரச்சொல்லிக் கெஞ்சின போது வராத இரக்கம் இப்ப வந்திட்டுதோ பழையவிதானைக்கு? அவன் உன்னைப் பேயனாக்கிறான்..."

"எடியே சத்தம் போடாதை. மோளவைக்கு கதை... அவர் இந்த முறை 'சேமன்' வேலை கேக்கப்போறார். சுந்தரன் நொம்பராய்ப் போனானெண்டால் அவருக்குத் துண்டுபோடமாட்டான். அதுக்குத்தான் என்னைப் புடிச்சவர். வேறை ஆக்களிலை அவருக்குநம்பிக்கையில்லை. நான் மட்டுமில்லை. இன்னம் ஏழு பேரை நொம்பராக்கிறதுக்கு மனிசன் காசு சிலவழிச்சு வேலை செய்யுது ... மனிசன் கட்டாயம் வெல்லும். 'நான் சேமனாய்ப் போனனெண்டால் பெரிய வேலைகளிலை நாலஞ்சை உனக்குத் தருவன். நீ ஆற்றையும் பேரிலை போட்டுச் செய். வாறதிலை எனக்கும் [illegible] தன் தரப்புறியமெண்டால் தா' எண்டு மனிசன் சொல்லுறான். நீ விசரி விசியம் விளங்காமலை...! உலைதச் சொல்லி

(8-ம் பக்கம் பார்க்க)




சவுக்காரம் வாங்கும் போது
மில்க்வைற் நீல சவுக்காரம் என்று
கேட்டு வாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.
மில்க் வைற்
நீல சவுக்காரம் ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

## ஞாயிறு கதை மலர்

## பங்குனி முல்லை

# தோணித்துறையில்

### 8. உண்மை நண்பன்

“என்ன மாரிமுத்து, நித்திரையாய்ப் போய்விட்டாயா” என்றுகூறிக்கொண்டே கொட்டிலுள் நுழைகிறான் குப்பன்.

“இல்லை. சற்று அசதியாக இருந்தது, உறங்கிவிட்டேன்” என்கிறான் மாரிமுத்து.

“மாரிமுத்து இதைக் கேட்டியா? துறையில் நின்ற தோணியை அவிழ்த்து, கொஞ்சத்தூரம் வலித்துக் கொண்டு போட்டுதுகள் இங்தச் சிறிசுகள். தீபாவளி நாளில் உல்லாசமாகத் தோணியோட்ட ஆசைப்படுகிறார்கள். உல்லாசமெல்லாம் ஆபத்தாக முடிந்து விட்டால் என்ன என்பதை நினைத்துப்பாரார்களாம். அதுகளைக் கூப்பிட்டு விரட்டிக் கலைத்துவிட்டு, தோணியையும் கட்டிவிட்டுத்தான் வருகிறேன்” என்றான் குப்பன்.

‘உம்...’

“அது கிடக்க, என்ன உன்னைச் சிலநாட்களாகக் காணவில்லை. கடலுக்கும் வருவதில்லை” - குப்பன் ஆர்வத்துடன் மாரிமுத்துவை நோக்கினான்.

“என்ன அப்படிக் கேட்கிறாய். சில நாட்களாகவே பகற்பொழுதை இக்கொட்டிலுக்குள்ளேயே கழிக்கிறேன். நீ அந்த நேரங்களில் வருவதில்லை. நீ வரும் வேளைகளில் நான் வருவதில்லை. தொல்லைகள் பெருகிவிட்டன. தொழில் மட்டமாகப் போகிறது. இவையெல்லாவற்றிற்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. சில வேளைகளில், இவற்றிலிருந்து தப்பிவிட இறந்து விட்டால என்றிருக்குது” - நைந்த குரலில் கூறினான் மாரிமுத்து.

“இவற்றைக் கண்டு நீகூடக் கெலித்துவிட்டாயா? அஞ்சினவனுக்கு ஆகாயமெல்லாம் பேய் போலிருக்கும். மனதைத் தளரவிட்டவனுக்கு எல்லாம் தோல்வியாகத்தான் தெரியும். மனதைத் திடப்படுத்திக் கொள். வருவதைக் கண்டு வருந்தாமல் அவற்றை எதிர்த்து போராடு. உழைப்பு! உழைப்பு! தளராத உழைப்பு. இதைக் கைக்கொள். கவலைப்படாதே” - படித்த மனிதன் போல் அனுதாபத்துடன் ஆறுதல் கூறினான் குப்பன்.

“நாளைக்குக் கடலுக்கு வந்து விடு. என்ன?” குப்பன் கேட்டான்.

“வரலாமென்று தானிருக்கிறேன். ஆனா...”

“என்ன ஆனா?”

“ஐந்து நாளாய்க் கொட்டும் மழை இன்னும் விடுகிறதில்லை என்று நிற்கிறது. கடல் அமைதியிழந்து குமுறிக் கொந்தளிக்கிறது.”

**“கோலவேலவன்”**

“இதையெல்லாம் பார்த்தால் மனிதன் வாழ முடியாது. இந்த வாழ்வே துன்பத்துள்ளும், அவசரத்துள்ளும், பயங்கரத்துள்ளும், முடிவு தெரியாது செல்லும் சேற்றுச் சக்கரம் தான். நானுந்தான் தினம் கடலுக்குப் போகிறேனே”

“ஆ. சரி நானும் நாளை வருகிறேன்.”

“மழையிருட்டு பகலைக் குறைத்து நாலு மணிக்கே இரவை வரவழைத்து விட்டது. நான் வரப்போகிறேன்”- கிளம்பி விட்டான் குப்பன்.

“நின்று கொள். நானும் வருகிறேன்” என்று துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தான் மாரிமுத்து.

### 5. விடிவும் முடிவும்

இரவு முடிந்து விட்டது. இன்னும் கதிரவன் முகங் காட்டவில்லை. மழையிருள் அவ்வைகறைப் பொழுதையும் முடிந்து விட்ட இரவையும் எல்லை போட்டுப் பிரிக்க முடியாது செய்திருந்தது. தோணித்துறைக்குப் பக்கத்தில் நின்ற பூவரசமரக் கூட்டத்திலும், ஈச்சம் பற்றைகளிலும் துயில் கொண்டெழுந்த பலவித பறவைகள் பலவித ஒலிகளை எழுப்பும் ஓசையும், அவை சிறகடித்துச் சிலிர்த்துக் கொள்ளும் ஓசையும் அம்மனோரம்மியமான பொழுதை இன்னும் வனப்புறச் செய்தன. அவ்வொலிகளே அந்த இடத்தைக் கலகலவென்று விடியச் செய்வது போலிருந்ததையும் கவனியாது, வலையும் பறியுமாகத் தோணித் துறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் மாரிமுத்து.

கொட்டிலை அடைந்தான். அங்கு ஒருவரையும் காணவில்லை. மற்றவர்களெல்லாம் முதனாள் தீபாவளி கொண்டாடிவிட்டு, இந்நேரம் உறங்கிக்கொண்டிருப்பார்கள். மாரிமுத்து, வேட்டியை மாற்றிக் கோவணத்துடன் பறியும் வலையுமாகச் சென்று கட்டி நிறுத்தப்பட்டிருந்த தோணியில் ஏறினான்.

வழக்கம் போல் நான்கு திசைகளையும் கைகூப்பி வணங்கினான். கண்களை மூடிக்கொண்டு “வருணபகவானே! இந்நீரில் மீன் பிடிக்கச்செல்லும் என்னை ஆபத்தின்றிக் காத்தருளும். இந்த ஏழைக்கு தொழிலில் ஏமாற்றத்தை அளித்து விடாதேயும்” என்று மனதுள் வேண்டிக்கொண்டான். துடுப்புகளை எடுத்துத் தோணியைச் செலுத்தினான்.

மீன் மினுமினுத்த இடங்களே அவனுடைய பழகிய கண்களுக்குத் தோன்றின. வலையைப் பரக்க எறிந்தான். அதை என்ன லாவகமாக எடுக்க வேண்டுமோ, அதைவிடக் கவனமாக வலையைச் சுருக்கி எடுத்தான். ஆவலுடன் பார்த்தான். அப்போது தெரிந்தது... ஒன்றுமே அகப்படவில்லையென்று தான். பின்பும் சில முறைகள் வலை வீசியும், ஒன்றுமே அகப்படவில்லை. மிஞ்சியது ஏமாற்றம் தான்.

சகுனமே சரியாயில்லை. வெறுப்பேற்பட்டது அவனுக்கு. துடுப்பை வலித்தான் ஆழமான பகுதியை அடைந்தான். அங்கு அவன் ஏமாற்றத்தைக் காணமுன்பே...

கட...கட...கட...கட...

கற்பாதையில் மாட்டு வண்டிச் சவாரியின்போது ஏற்படும் ஒலி போல் இடி இடித்தது. மின்னல் வில்லெனத் தோன்றி, கண்களைப்பறித்து, நொடியில் மறைந்தது. இருண்டு கிடந்த வானம் நன்றாக இருட்டியது. குளிர்காற்றுப் புயலாக வீசியது. முகில்கள் அங்குமிங்கும் அலைந்தன. வானமே பீற்றலாகி விட்டதா? ஒரு நாளும் பெய்யாத மழையாக நீரை ஆலங்கட்டி போல் கொட்டியது.

தோணியில் நீர் நிறையும் போலிருந்தது. அவன் தன் இரு கைகளாலும் நீரை வெளியேறச் செய்த முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாகியது. தோணி நீருள் ஆழத்தொடங்கி... அமிழ்ந்தே விட்டது. நீர்க்குமிழிகள் மேல் நோக்கி வந்து ‘பக் பக்’ என்று வெடித்தன. என்ன? மாரிமுத்துவும் அக்குமிழிகளின் நிலைக்கு வந்துவிட்டானா?

ஆதரவற்ற பறியையும், வலையையும், துடுப்பையும் கைவிட்டு, அவ்வாழ்கடலில் நீந்த முயலுகிறான். சில நாட்களாகச் சிந்தனையாகவும், பட்டினியாகவும் கிடந்து தளர்ந்திருந்த கைகளும், கால்களும் அவன் நினைத்த அளவுக்கு உதவ மறுத்து விட்டன. அனவரதமும், அலைகளை அடுக்கடுக்காக அனுப்பியனுப்பி ஆயாசமடைந்ததனாலேற்பட்ட அகோரப் பசியை அடக்க மாட்டாதது போல ஆர்ப்பரித்தெழுந்தது அலை கடல்.

அந்தோ...

நீலக் கடல் மாரிமுத்துவின் கண்களுக்குப் புலப்படவில்லை. நீலத்தொடுவானமும், வெள்ளி மணற்பரப்பும் எங்கோ மறைந்துவிட்டன. சில தினங்களாகச் சிந்தனையலைகளில் புரண்டவன், இப்போது நீரலைகளின் மேல் புரண்டான், உருண்டான், மேலும் கீழுமாகத் தூக்கியெறியப்பட்டான்.

அலைகடல் மேல் அதை வென்று கலஞ் செலுத்தியவனை மாரிமுத்து - இல்லை, அவன் உடல் அக்கடலின் போக்கிலேயே போய்க்கொண்டிருந்தது. மீன்களை மனிதர்களுக்கு உணவாக்கிக் கொண்டிருந்த அவனுடைய உடல், வஞ்சினத்தோடு காத்திருந்த பலவித மீன்களுக்கு இரையாக மாறிக்கொண்டிருந்தது.

விடிவுவருமென்று காத்திருந்தான் மாரிமுத்து. அவன் முடிவு...?

(9-ம் பக்கம் பார்க்க)

# அபேட்சகர் அம்பலத்தார்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றியே! அந்தப் பெரிய மனிசன்- இந்தச் சதம் பெறாத அலுவலுக்கு என்ரை காலிலை விழுந்து கும்பிடுறதெண்டால்? அவ கதை பேசரு கதை...”

இந்தளவில அம்பலஅம்மாவின் மகன் கோபால் குறுக்கிட்டு -

“எணை ஆச்சி! அப்பு பழைய விதானையாருக்கு நோட்டோ- ஈடோ எழுதிக் குடுத்தவரெண்டு, மத்தியானம் செல்லமான் கதைச்சுது அணை...” என்று, எரிகிறநெருப்பில் பெட்ரோலைக் கொட்டினான். மாமியைக் கேட்கவேண்டுமா?

“உன்-ரை அணை! மெய்யணை சண்டாள மனிசா! என்ன எழுதிக் குடுத்த நீ- என்னண்டு எழுதிக் குடுத்த நீ?”

“என்னண்டு - குளநண்டு! அவர் சிலவழிக் கிறதெண்டால் நமக்கு மன அறிவில்லையே! நம்மடை கையிலையும் வேண்டாமே? அதுதான் — அவர் வேண்டாமெண்டுதான் சொன்னவர் - அந்தப் புளியடித் துண்டை ஈடுபோலக்காட்டி ...”

“துலைச்சுத் தலை முழுகிப் போட்டாயெண்டு சொல்லு! எத்தினை பவுணுக்கெணை வைச்ச நீ? ஆரட்டை எழுதினது?”

“நானென்ன பேயனே கனக்க வெய்க்கிறதுக்கு! நூறு பவுணுக்கு (ஆயிரம் ரூபாய்)த்தான வெச்சநான். நம்மடை சித்தம்பலம் பிறக்கிறசியார் தான் எழுதினவர்...”

“நாய்க்கு ஏழுகடலுக்கங் காலை புளியமிலை மட்டுககாணி கிடக்குதெண்டு பழங்கதை. அதைப்போல ஆக உள்ள முதுசொம் அந்தப் புளியடித் துண்டு இரண்டு ஏக்கர்தான். அதுகும் முடிஞ்சிது மற்றவையைப் போல வதுவைக்காணி கீணியெடுத்து வெட்டிச்செய்ய உனக்குச் சதை காணுது. இரண்டுகுமர் வீட்டோடை கிடந்து கிழடு பத்துதுகள். நண்டுங் குஞ்சுமாய்க் கிடக்கிற இந்தப் பச்சை மண்ணுகளை என்ன செய்யிறது? நாளைக்கு நீ கண்ணை மூடிவிட்டாயெண்டால் இதுகளின்ரை கெதியென்ன? அவர் நொம்பராய் போறாராம்கொம்பராய்...த்தூ! நீயும் ஒரு மனிசனே!”

“ஒத்தடி வாயை! புள்ளைப் பெத்த எனக்கு வளக்கத் தெரியும்; கடன் பட்ட எனக்கு இறுக்கத்தெரியும். இந்தக் கடனெல்லாம் இரண்டு கொந்தருத்து வேலையோடை பறக்குடி சின்னாச்சி பறக்கும். காணி ..டுவெச்ச கதை. கிதை வெளியிலை வந்துதோ-? ‘மேடர்’தான் செய்வன். ஓ! அவவுக்கு ஆளைத் தெரிய இல்லை...”

- மாமிக்கு அடிப்பதற்கு எழும்பிய அம்மான் முற்றத்திலே குப்புற வீழ்ந்துவிட்டார். மீண்டும் எழும்புவதற்கு முற்றத்து முருங்கை மரத்தை ஊன்றுகோலாகப் பிடிப்பதற்கு அவர் பண்ணிய பிரம்மப்பிரயத்தனங்கள் வியர்த்தமாகிவிட்டன. முருங்கையைப் பிடிப்பதற்கு அவரால் முடியவே முடியவில்லை.

படுத்த படுக்கையிற் கிடந்தபடியே —

“மோனை! பெரியபுள்ளை! அந்தப் புள்ளிக்கோழிப் பேட்டை அறுத்துக் கறிகாச்சு! மத்தியானமும் சோறு தின்ன இல்லை ... கெதியாய்க் காச்சு!” என்று, மூத்தமகள் கமலாவிடம் கேட்டுக்கொண்டார் ... வாந்தியெடுக்கவும் ஆரம்பித்துவிட்டார் ... அறிய வேண்டியதனைத்தையும் அறிந்துவிட்ட நானும் வீடு சென்றேன்.

* * *

மறுநாள். அம்பலமம்மானின் தேர்தல் அபேட்சக விவகாரத்தை ஆலோசனைக்கெடுப்பதற்காக - சங்கப்பற்றுகளற்ற ஒரு பொதுக் கூட்டம் கூடினோம். அம்பலமம்மான், செல்லன், கப்பன் மூவருக்கும் அழைப்பு விடுத்தும் அவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை.

நானும் வேறு சிலரும் தனிப்பட்ட முறையில் அம்மானைச் சந்தித்து தடுத்துப்பார்த்தோம். அவர் அசைந்து கொடுக்கவில்லை. அபேட்சகர் நியமனப் பத்திரத்தைத் தாக்கல் பண்ணி தேர்தல்போட்டிக் களத்தில் குதித்துவிட்டார்.

‘தேர்தலில் போட்டியிடுவது அவரின் உரிமை. அவரைப் போட்டியிட வேண்டாமென்று நாமேன் தடுக்க வேண்டும்? அவருக்குத்தகுந்த பதிலை மக்கள் கூறட்டும்’ என்று, அவர் வழியில் விட்டுவிட்டோம்.

தேர்தல் பிரசாரம் அசுர வேகத்தில் நடைபெற்றது. எங்களுடைய வட்டாரத்தைச் சேராத பல ‘பெரிய புள்ளிகள்’ அம்மானுக்காக இரவு பகலாக வேலை செய்தனர். அம்மான் காணி ஈடுவைத்தெடுத்த ஆயிரம் ரூபாவும் தண்ணீரில் போட்ட உப்பாகியது... குறித்த தினத்திலே ‘போட்டி’ அமைதியாக நடந்தேறியது. இரண்டாம் வட்டாரமாகிய எமது வட்டார அங்கத்தவராக சுந்தரம் அமோக வெற்றியீட்டினார்.

அம்பலமம்மானின் தேர்தல் சின்னமான ஆட்டுக்கு நேரே தவறுதலாகக்கூட யாரும் புள்ளடி போடவில்லை.

அதுமட்டுமல்ல — அம்மானின் அரசியல்குருவான முத்துவேலர் - இராமலிங்கம் என்னும் பழைய விதானையாரும் அங்கத்தவராக முடியவில்லை...

குறுக்குவழியிலே கி. ச. தலைவராக வருவதற்குக் கற்பனை பண்ணிய அவருடைய எண்ணக் கனவு, கனவாகவே கலைந்து விட்டது.

சூழ்ச்சி, சுயநலம், பதவிப் பித்துகள் படுதோல்விகண்டன.

உண்மை, நேர்மை தகுதிகள் முழுவெற்றிபெற்றன.

பணத்தைக்கொண்டும், மதுவைக் கொண்டும் வாக்கு வேட்டையாடியவர்கள் மண்ணைக் கௌவினார்கள்.

வாக்குரிமையின் மகத்துவத்தை எமது வட்டாரமக்கள் மட்டுமல்ல, எமது கிராமசபையைச் சேர்ந்த பதின்மூன்று வட்டார வாக்காளர்களுமே உணர்ந்து விட்டார்களென்பதை தேர்தல் போட்டிகள் தெளிவாக நிரூபித்துவிட்டன.

* * *

பழையவிதானையார் தோல்வியைக் கண்டு துஞ்சவில்லை. அவர் பாசிபிடித்த பணக்காரர். ஆயிரம் புள்ளிகளுடைய மானுக்கு ஒரு புள்ளி குறைந்ததினால் குடி முழுகிவிடுமா?

அம்பலமம்மான் — எருமை மாட்டைக்கண்டு, அந்தளவு தானும் வரவேண்டுமென்று மூச்சுப்பிடித்துமுக்கிய தவளை...

“அடியே அடியே! அலுவலைப் பாரடி! உந்த நூறு பவுணும் இரண்டு கொந்தருத்து வேலையோடை என்ரை சேமன் எடுத்துத்தருவாரடி... என்ரை பழைய விதானையார், முத்துவேலர்-இராமலிங்கம் சேமனாயிருக்கப்போ எனக்கென்னடி பயம்?”

— இவ்வாறாக... அம்பலமம்மான் பேசியும் அழுதும் சிரித்தும், மலைப்பிஞ்சுகளை எடுத்தெறிந்து விளையாடியும் வருவதாக ஊரிலே கதையடிபட்டது.

“எனக்கு விசரெண்டு எந்த விசரன் சொன்னவன் ... இல்லைக் கேக்கிறன்?”

— இப்படியாக அம்பலமம்மான் மற்றவர்களைக் கேட்பதுமுண்டு. கேட்கிறார்.

(யாவும் கற்பனை)

அழகிய பெனியன் கால்மேஸ் !!
“லேடன்” தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன
LEYDEN
பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி ‘லேடன்’ பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது ‘லேடன்’ பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# தோணித்துறையில்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## 10. துணை கிடைத்தது

"கடலுக்குச் சென்ற மாரிமுத்து ஒரு நாளாகியும் திரும்பவில்லை. அவன் சென்ற தோணியையும் காணவில்லை" என்ற செய்தி எல்லோருடைய வாய்களிலும் அடிபட்டது.

"மகன் தேடும் அவமானத்தைப் பொறுக்கமுடியாது நடுக்கடலுள் இறந்துவிட்டான்" என்றனர் சிலர்.

"சிறப்பாக வாழ்ந்தவன் தரித்திரனாகி விட்டபின் வாழ விரும்பாது தற்கொலை செய்துவிட்டான்" என்று காரணங் கற்பித்தனர் சிலர்.

"தற்கொலை செய்யவேண்டுமானால், கடல்தானா அதற்கு இடம்? அதைவிடச் சுலபமான வழிகள் பல இன்று இருப்பது அவனுக்குத் தெரியாதா?" என்று சிலர் அடித்துக்கூறி எதிர்த்தனர்.

"பெருமழையின்போது, ஆழமான பகுதியில் நிற்கையில் தோணி அமிழ்ந்திருக்கும். அலை அவனை அடித்துச் சென்றிருக்கும்" என்று கூறினர் விஷயம் தெரிந்தவர்கள்.

குப்பன் தான் தேடுவதற்கு முயற்சிகள் செய்தான். அன்று சிறிது நேரம் பிந்திப் போனதால், மழையைக்கண்டு திரும்பியது நல்லதாய்ப் போய்விட்டதென மகிழ்ந்தான். அந்தச் சிறு நேரத்தைத் தானே விதி என்கின்றனர் சிலர்.

செல்லம் கடற்கரைக்கு ஓடிச் சென்றாள். அவள் புலம்பினாள்; புரண்டாள்; உருண்டாள்; தலைமயிரைப்பிடித்து இழுத்தாள்; வெய்துயிர்த்தாள்; கண்ணீர் வடித்தாள். அவளுடைய புலம்பலைச் செவிசாய்க்காதது போல கடல் தன் பாட்டில் அலைகளை உண்டாக்கிக்கொண்டிருந்தது. பாவம்! கடலுக்கு மனம் என்று ஒன்று இருந்தால் மாரிமுத்துவுக்கு ஏன் இந்நிலை ஏற்படப்போகிறது?

'கணவனைக் காணவில்லை' என்றறிந்த முத்தம்மா மன அதிர்ச்சியடைந்து விட்டாள். 'தோணியையும் காணவில்லை' என்று கேள்விப்பட்டதால் மறுகரைக்கோ, எங்கோபோயிருப்பான் என்ற நம்பிக்கையென்னும் நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்தாள் அவள்.

தேடியும் காணாது, குப்பன் பொலீசுக்குத் தகவல் கொடுத்தான். எவ்வளவோ நேரம் மோட்டார் 'லோஞ்'சில் தேடி, முடிவில் பாறையொன்றில் சிக்கிக் கிடந்த உருத்தெரியாத மாரிமுத்துவின் உடலைக்கண்டு பிடித்தனர்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட முத்தம்மாள் அச்சிறு நூலையும் அறுத்துக்கொண்டு இந்த உலகத்தை விட்டே பறந்துவிட்டாள். கைப் பிடித்த கணவனுடன் அன்பாக வாழ்ந்துவிட்டவள், கணநேரங்கூட அவனைப் பிரிந்து இருக்கமாட்டாதவள் போல் ஒன்றாகவே போய்விட்டாள். அவள் அல்லவோ பாக்கியசாலி?

## 11. நனவாய் விட்டது!

தாயுந் தந்தையும் இறந்த செய்தி கேட்டு ஓடி வந்தான் ராமசாமி. கதறினான். கண்ணீர் சிந்தினான். மனங்கரைந்தான். இனி அவன் என்ன செய்தென்ன? அவர்கள் வாழும் போதல்லவா 'மகன்' என்ற பெயரைக் காப்பாற்றிக்கொண்டு வாழ்ந்திருக்கவேண்டும்.

இப்போது அவனுக்குத் தான் செய்ததெல்லாம் குற்றங்களாகவும், கெட்டவைகளாகவும் தோன்றின. மனம் நொந்தான். இவ்வளவு கெட்ட பெயர்களைப் பெற்ற பின்னும், தன் தவறை யுணர்பவன் நல்லவனாகத் தானே இருக்க வேண்டும்?

இனியும் கெட்டவனாக வாழாது, தன் பரம்பரைத் தொழிலைச் செய்து கொண்டு நிராதரவாக நிற்கும் தன் அருமை அக்காவைக் காக்க வேண்டுமென உறுதி பூண்டான். அனுபவத்தின் பின் பிறக்கும் உறுதி அதிநிலையானதாகத்தானிருக்கும். இனி மலை குலைந்தாலென்ன? அவன் மனம் குலையாது. என்னவோ, ராமசாமியைப் போன்ற சிலருக்கு, நிழலின் அருமை வெய்யிலிற்றான் தெரிகிறது. ஆம். மாரிமுத்து கண்ட கனவு நனவாகியே விட்டது.

தன் பெற்றோர்களுக்கு நல்லதொரு பிள்ளையாக வாழாவிட்டாலும், அவர்களின் ஈமக்கடனைச் செய்து முடித்தான் ராமசாமி.

## 12. கண் திருஷ்டி

பங்குனி மாதம் பிறந்து விட்டது!

வேனிற்காலம் தன் ஆட்சியைத் தொடங்கியிருந்தது. அதற்கிடையில் தான் எத்தனை மாற்றங்கள்! இயற்கையின் மாற்றங்கள்!

செல்லம் தன் ஒரே வாரிசான ஆண்குழந்தையைப் பெற்றெடுத்து விட்டாள். கனவு போல் மூன்று மாதங்கள் வாழ்ந்துவிட்ட கணவனின் நினைவுக்காக, வாழ்க்கையை இலட்சியம் நிறைந்ததாக்குவதற்கு ஒரு பிள்ளை பிறந்துவிட்டான். அவன் குடும்பமென்னும் பனையில் மூன்று காவோலைகள் விழ, ஒரு குருத்தோலை பிறந்துவிட்டது. முப்பத்தொன்றுக்கு இன்னும் பத்து நாட்கள் தான் இருக்கின்றன.

அவளுடைய மாமியார் தான் பிரவசம் பார்க்க வந்திருந்தாள். மகன் என்ற உறவு போய்விட்டாலும், பேரன் ஒருவன் கிடைத்த ஆனந்தம் அவளுக்கு. இப்போது ராமசாமி கடமையுணர்ந்த கண்ணியமானவனாக வாழுகிறான். தினமும் கடலுக்குப் போகிறான். பிடித்த மீனை, அதே மாரிமுத்துவின் சயிக்கிளில் சந்தைக்குக் கொண்டுசெல்கிறான். உழைக்கும் பணத்தில் தன்னையும் தன் தமக்கையையும் வாழவைத்துக்கொண்டு வருகிறான்.

புலரிப் பொழுது. இன்னும் ராமசாமி கடலுக்குப் போகவில்லை. ராமசாமி செல்லத்தின் குழந்தையைத் தூக்கி முத்தமிடுகிறான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லத்தின் மாமியார் "செல்லம்! உன் தம்பியின் ஆசையைப்பார் ஆசையை. விரைவில் கலியாணம் செய்துகொண்டு உன் பிள்ளைக்கு, பெண்பெற்றுத் தரச்சொல்லிக் கேளேன்" என்கிறாள் விஷமப்புன்னகையுடன்.

சிரிப்பைச் சிந்திவிட்டு, தலையில் முண்டாசைக் கட்டிக்கொண்டு வலையும் பறியுமாகப் புறப்பட்டுவிட்டான் ராமசாமி.

"என்னவோ மாமி, இப்போதென்றாலும் என் தம்பி திருந்தி விட்டானே யென்று நினைக்க, பெற்றிழந்த கண் ஒளிபெற்றது போல் இருக்கிறது" என்கிறாள் செல்லம், தன் அன்புக் குழந்தையை அரவணைத்துக்கொண்டு.

"செல்லம், இந்த ஊர்ச் சனங்களின் கண்ணூறுதான் எல்லாம். இல்லாவிட்டால் சிறப்பாக வாழ்ந்துவிட்ட உன் அப்பனுக்கும், ஆத்தைக்கும், ஏன் உனக்குமே இப்படியா வாழ்வு வாய்க்க வேண்டும். இந்தத் தரித்திரம் பிடித்த சனங்களை, தரித்திரம் விட்டு விட்டு ஓடிவிடுமா? ராமசாமி, மாரிமுத்து இருக்கும் போதே நல்லவனாகவாழவில்லை தான் ....."-மூச்சை யிழுத்துக் கொண்டு தொடர்ந்தாள் செல்லத்தின் மாமியார்.

"செல்லம், உனக்கிது தெரியுமா? சூரியனும், சந்திரனும் ஒரே நேரத்தில் வானில்காணப்படுவதில்லை. சூரியன் நிற்கையில், சந்திரன் தோன்றினாலும், சூரியனின் ஒளியில் சந்திரன் தெரியாது. சூரியன் மறைந்த பின்பே, அச்சூரியனிடமிருந்தே ஒளியைப் பெற்று, வானில் பவனி வந்து தனித்தன்மையுடன் ஒளிகொடுக்கிறான் சந்திரன். அந்த ஞாயிற்றையும் திங்களையும் போலத்தான் உன் அப்பனும் ராமசாமியும், இருவரும் வாழும்போது நன்றாக வாழாது, மாரிமுத்து மறைந்த பின், அம்மறைவால் ஏற்பட்ட உணர்வால், ராமசாமி திருந்தி இப்படி வாழ்கிறான்" என்று கூறி விட்டுச் செல்லத்தை நோக்கினாள்.

எப்படியானாலும், தன் தம்பி நல்லவனாக வாழுவதநினைந்த மகிழ்ச்சி செல்லத்தின் முகத்தில் மிளிர்ந்தது. மடியில் கிடந்த குழந்தை கண்களை அகலவிரித்து அழகாகச் சிரித்தது!

(முற்றும்)

# யாத்திரிகன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கிறது நவீன வைத்தியம். மறுதடவை நோய் அணுகாதபடி கூடியமட்டில் பாதுகாப்பு அரண் வகுத்துத் தருகிறது. அதற்குமேல் நோயின் கூற்றை அதன் மூலத்தை அறவே களைவதென்பது அதனால் ஆகாததொன்று.

குழந்தைப் பருவத்தில் சிறுபிள்ளைகள் கக்குவான், சின்னம்மை, நெஞ்சுத்தடிமன் என்பனவற்றால் பீடிக்கப்படும் போதுபோதியகவனமெடுக்காவிட்டால் நாளடைவில் அதுவே இந்நோய்க்கு வித்திட்டுவிடுகிறதென்றும் வைத்திய சாஸ்திரம் எச்சரிக்கை செய்கிறது. குழந்தைகளைக் காற்றோட்டமில்லாத நெருக்கடியில் விட்டுவைப்பது எப்பொழுதுமே கூடாதாம்.

தொய்வு நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு ஒரு அற்ப காரணமே இந்நோய் திடீரென்று எழுந்து தாக்குவதற்குப் போதும். படுக்கை அறை விளக்கை அணைத்து விடுதல், கதவைத்திறந்து விடுதல் அல்லது அடைத்துவிடுதல் இரவு ஆகாரத்தில் ஒரு சிறியமாறுதல் என்பனவெல்லாமே ஒரு கூற்றாகி இரவு ஒரு கண் உறங்குவதற்குள்ளாக ஆளை எழுப்பி உட்காரவைத்துவிடும். ஆதலால் இது போன்ற சின்ன விஷயங்களிலும்கூட என்றைக்கும் விழிப்பாகவே இருக்கவேண்டியது அவசியமாகிறது.

நரம்புச் சோர்வினால் உண்டாகும் ஒரு 'சீர்குலைவு'தோற்றுவிக்கும் ஆஸ்த்துமா, நெஞ்சில் வலிகண்டு அதன் முதிர்ச்சியாக கபம் கட்டி இருமலோடு உண்டாகும் ஆஸ்த்துமா, மூச்சடைப்பு ஆஸ்த்துமா என்று இந்நோயை பலவகைப்படுத்திக் கூறுவர். அது அதற்கென்று மருந்துகளும்ஏராளம். யாவும் அப்போதைக்கப்போது சாந்தி அளிக்கும் நிவாரணங்களாகவே உள்ளன.

சிலபோது குடும்பவழி பிறப்பு வழியாக நமக்குவருவதாயிருந்த போதிலும் ஆஸ்த்துமா ஒரு தொற்று நோயல்ல. அது எவ்வளவுக்கு நம்மைத் துன்பப் படுத்தினாலும் அது ஒரு 'கணிசமான' நோயே ஆகாது என்று கூறும் வைத்திய நிபுணர்களும் இக்காலத்தில் இருக்கிறார்கள்.

அது எப்படியிருந்த போதிலும் இந்நோயின் தாக்குதலுக்குட்பட்ட போதெல்லாம் காலதேவன் நம்மைஅணுகிவருவது போல நோயாளியும், கூட அவரைச் சுற்றி இருப்பவர்களுமே திகிலடைவது மெய்.

அப்பொழுது அவரது பிராணவல்லைதக்கு கைகொடுக்கும் உலகம் அவருக்கு அன்புமயமானதாகத்தோன்றி வாழ்வின் மீது அவருக்குப்புதுப்பற்றுதல் ஏற்படுவதும் உண்மை. ஏன், இன்றுவரை, ஆற்றிலோ குளத்திலோ, கடலிலோ அடுத்த வீட்டுக் கிணற்றிலோ வீழ்ந்து பிராணவஸ்தைபபட்டு தத்தளித்த ஓர் இளமங்கை அவளைக் காப்பாற்றிய ஆடவனைத் தானே காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டாளென்று ஆயிரம் ஆயிரமாக உள்ள நமது நாட்டுக் காதல் கதைகள் ஒரேமுகமாகச்செப்புகின்றன!

'அன்பின் வழியது உயிர் நிலை' அன்றோ!

(தொடரும்)

# கலை அரங்கம்

## "பெரிய இடத்துப்பெண்"

கிராமத்திலே பெரிய மனிதரான கைலாசம்பிள்ளைக்கு ஒரு மகனும் ஒரு மகளுமாக இரு பிள்ளைகள். கைலாசம் பிள்ளை பணவசதி, அந்தஸ்து எல்லாம் உடையவர். அதே ஊரில் வசிக்கும் முருகப்பன் என்ற விவசாயிக்கும் கைலாசம்பிள்ளைக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுகின்றது. கைலாசம்பிள்ளையின் மகன் முருகப்பனின் முறைப் பெண்ணை மணக்க விரும்புகிறான். இந்த விருப்பத்தை நிறைவேற்றத் தங்கை சதி செய்கிறாள்; இதில் வெற்றியுமடைகிறாள், முருகப்பன் தான் காதலில் தோல்வி அடைந்ததால், அதற்குக் காரணமாக உள்ள பெண்ணையே மணம் முடிக்க உறுதிகொள்கிறான். இறுதியில் கைலாசம்பிள்ளையின் மகளையே துணைவியாக அடைந்து தனது சபதத்தை நிறைவேற்றுகிறான். இதனைத் தொடர்ந்து குடும்பத்திலே பல சச்சரவுகள் உண்டாகின்றன. முடிவில் குடும்பத்தில் அமைதி ஏற்படுகிறது.

இப்படத்திலே விவசாயியாகவும் பட்டணவாசியாகவும் எம். ஜி. ஆர். தோன்றுகிறார். கைலாசம்பிள்ளையாகத் தோன்றும் எம். ஆர். ராதா சிறந்த பக்திமானாக நடித்து, ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறார். கைலாசம்பிள்ளையுடைய மகளின் பாகத்தை ஏற்று சரோஜாதேவி நடித்துள்ளார். நடிப்பிலே துடிப்பும் அகங்காரமும் நிறைந்திருக்கிறபடியால், தமது பாகத்துக்கு வலிமை அளிக்கிறார். எம். ஜி. ஆர். ரும் அவர்களும் ஒருங்கே காட்சி அளிப்பதால், ரசிகர்கள் எதிர்பார்ப்பதுபோல், சிலம்புச் சண்டையும் மல்சண்டையும் போதியளவு இடம்பெறுகின்றன. நாகேஷ் இருக்கிறபடியால் நகைச்சுவைக்குக் குறைவில்லை.

ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவான இப்படத்துக்கு விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைத்துள்ளனர். சுசீலா பாடிய "ரகசியம் பரம ரகசியம்" என்ற பாடலில் புதுமை இருக்கிறது. டி. எம். சௌந்தரராஜனின் "அவனுக்கென்ன தூங்கிவிட்டான்" என்ற பாடல் இனிமையாக இருக்கிறது.

பொழுது போக்குக்காக இப்படத்தைப் பார்க்கலாம். படமாளிகையை விட்டு வெளியே வர நாகேஷ்தான் நினைவில் இருப்பார்.

— எம். சிவலிங்கம்

## 'குடும்பம் ஒரு கோயில்'

சாந்தி மூவிஸார் தயாரித்து வரும் படத்துக்கு 'குடும்பம் ஒரு கோயில்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. பண்டிட் முக்ராம் சர்மா மூலக்கதையையும், மா. லட்சுமணன் திரைக்கதை வசனத்தையும் எழுதியிருக்கும் இப்படம் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் வளர்ந்துவருகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)
விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (காவலப்பிட்டி)



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி
மற்றும் பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்

ரீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.

DEAN MARTIN
in
SONGS IN THE WORLD
(Totalscope—Colour) 81


## வரி விளம்பரம்


### குத்தகை

கைதடி கண்டி ரோட்டில் 8 மைல் தூரம் யாழ்ப்பாண மாநகரசபை ஒரு ஏக்கர்விசாலமுள்ள காணி, 6 அறைகள் கொண்ட மேல்வீடு. நல்லதண்ணீர், வாட்டர் சீல்கக்கூஸ், கோழி, பால் பண்ணைகளுக்கு மிகச் சிறந்தது. பொ. இராசையா, கைதடி. 207

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.
S. சுலைமான் கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### தேவை

ஜெயா பிஸ்கட் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பிஸ்கட், கேக் போன்ற பொருட்களை கொண்டுசென்று விநியோகம் செய்யக்கூடியவர்கள் தேவை.

நல்ல கொமிஷன் நேரில் வரவும். கிழமையில் காலை 8-00 மணி – 10-00 மணி.

Jeya Biscuit Manufacturers, Thirunelvely Jaffna 205

### IMPORTANT ANNOUNCEMENT SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

### WANTED

Wanted services Librarian. Females preferred State amount of security payable. Apply Gnaneswaran 1st Floor, Kumaraswamy buildings, (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 211

### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212


# விஷமத்தனமான சுற்றறிக்கை: ஆர்ச் பிஷப் அறிவிப்பு

கொழும்பு, சனி

கொழும்பு ஆர்ச்பிஷப் டாக்டர் தோமஸ்கூரேயின் காரியதரிசி வண. ஜே. பி. கிளின் டன் அனந்தப்பா, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு (சி. ஐ. டி.) எழுதியுள்ள கடிதமொன்றில், கொழும்பு ஆர்ச்பிஷப்பினால் வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படும் விஷமத்தனமான சுற்றறிக்கையொன்று நாட்டின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்படுகிறதென்றும் இந்த மோசடியைக் கண்டுபிடித்து இதில் சம்பந்தப்பட்டவர்களின் மீது நடவடிக்கையெடுக்குமாறும் கோரியுள்ளார்.

தமது கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"கொழும்பு ஆர்ச்பிஷப் வெளியிட்டுள்ளதாகக் கருதப்படும் சிங்கள சுற்றறிக்கையொன்று, நாட்டில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியை கத்தோலிக்கர்கள் ஆதரிக்கவேண்டுமென்று அதில் கோரப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள எந்தவிபரமும் உண்மையானதல்ல. இந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட முறையைக் கவனிக்கும்பொழுது, விஷமத்தனமான சிலர் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. இந்த மோசடியை உடன் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கையெடுக்குமாறுகேட்டுக்கொள்கின்றேன்"

இந்த விஷமத்தனமான சுற்றறிக்கை சம்பந்தமாக பொது மக்கள் விழிப்பாகவிருக்கும்படி ஆர்ச்பிஷப் டாக்டர் தோமஸ்கூரே அறிவித்துள்ளார்.

## உற்சவ விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டை புளியங்கண்டு பிள்ளையார் கோவில் உற்சவ விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் நாதஸ்வர கச்சேரியுடன் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சுகாதார தொழிலாளர் சங்கக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை சுகாதார தொழிலாளர் சங்க மருத்துவ தாதிப்பிரிவினரின் வருடாந்த மகாநாடு யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் இன்று பகல் ஒரு மணிக்கு நடைபெறும். திருமதி எஸ். இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டில் வைத்திய அதிகாரிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எம். பி. க்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

### மற்றுமொரு கூட்டம்

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ். நகர சபை மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும். இக் கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

ஊர்வலம் இன்று மாலை மூன்று மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பிக்கும். இக்கூட்டத்தில் 21 தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படும்.

# பிரதமர் கூட்டும் தொழிற் சங்கக் கூட்டம்

## பல பிரச்னைகள் ஆராயப்படும்

கொழும்பு, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தொழிற்சங்கங்களின் அவசரக் கூட்டமொன்று பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் நடைபெறவிருக்கிறது. பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட்டியுள்ள இக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இக் கூட்டத்தில் தொழிற் சங்கங்கள் சமர்ப்பித்த 21 கோரிக்கைகள் சம்பந்தமான அரசாங்கத்தின் நிலையை பிரதமர் தெளிவுபடுத்திக் கூறுவார். தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில், தொழிற்சங்கங்கள் வகிக்கும் நிலைகள் குறித்தும் பிரதமர் விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தொழிற்சங்க சம்மேளனத்தின் அதிகாரியொருவர்தெரிவிக்கையில்,மேதினக் கூட்டத்துக்கான ஒழுங்குகள் பற்றி இக்கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுமென்று கூறினார்.

இதற்கிடையில் 21 கோரிக்கைகள் சம்பந்தமாக என்ன நடவடிக்கை யெடுக்கவேண்டுமென்றும் மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகள் பற்றியும் ஆராயும் பொருட்டு தொழிற்சங்கங்களின் இணைப்புக் கமிட்டி செவ்வாய்க் கிழமையன்று கூடவிருக்கிறது.

## இளம்கழகம் வெற்றி

உடுப்பிட்டி சனி

மந்திகை அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் பருத்தித்துறை இளம் சங்கத்திற்குமிடையே மந்திகை அரசினர் வைத்தியசாலைமைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை இளம் சங்கம் வெற்றியீட்டியது.

வைத்தியசாலையின் பொறுப்பில் திரு. அருள்தாசனும்பருத்தித்துறை இளம் சங்கத்தின் பொறுப்பில் திரு. ஜெயரத்தினமும் தலைமை தாங்கினர்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, சனி

காங்கேசன் துறை துறைமுக காரியாலயத்தில் சிறுப்பராகக் கடமையாற்றிய கரவெட்டியைச் சேர்ந்த திரு. வி. சின்னத்துரை என்பவர் பதவி உயர்வு காரணமாக கொழும்பு துறைமுகக் காரியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டிக் கிராமசபையில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. க. சோமசுந்தரம் பதவி உயர்வு காரணமாக மன்னார் பகுதிப் பட்டினசபைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்

# மானிப்பாய் மருதடி விநாயகர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மைந்தர் நவரத்தின சிங்கம், இரத்தினசிங்கம் என்பவர்களும் இக்கோவில் தர்மகர்த்தர்களாக விளங்கினர், இவர்களுக்குப்பின் இவர்களின் வழித்தோன்றல்களாகிய கணேசனும், இராமேசுவரனும் தர்மகர்த்தாக்களாக விளங்குகின்றனர்.

நவரத்தினசிங்கம் அவர்கள் தெற்கு வீதியில் இருந்த அரசினரின் குளத்தின் ஒரு பாகத்தை மூடி, தேரோடுவதற்கு வசதியாக விசாலித்துள்ளார் இதற்கு சேர் வில்லியம் துவைனும் உதவி இவருக்குக் கிடைத்தது. இக்காலத்தில் தியாகராசக் குருக்களின் மகன், வெற்றிவேலருடைய மகன் ஐயாத்துரை அவர்கள் பூசை செய்து வந்தார். ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளாக வாழையடி வாழையாகப் பூசை செய்து வந்த சைவக் குருக்கள் பரம்பரையை நீக்கி, இவர் பிரம்மஸ்ரீ சீதாபதி ஐயரவர்களை மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலின் முதற் பிராமணக் குருக்களாக நியமித்தார். இவர் இங்கு ஐம்பது ஆண்டுகள் கடமை ஆற்றினார். இவருக்குப்பின் இவருடைய வழித்தோன்றலாகவந்த இரத்தினக் குருக்கள் இக்கோவிற் பூசகராக இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலே சைவ சமயத்தை நிலை நிற்கச் செய்த ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இன்று மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் பிள்ளையார் திருவுருவம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மூலமாய் வரவழைக்கப்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய 190 ஆண்டுகளுக்குமுன் அமர்த்திக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது வித்துவ சிரோன்மணி கணேசையர் மருதடி விநாயகர் மீது ஒரு செய்யுள் பிரபந்தம் பாடி, மருதடி விநாயகர் அந்தாதி, விநாயகர் கலி வெண்பா, ஊஞ்சல் என்பன பாடியுள்ளார், அகவலின் ஒரு பகுதி பின்வருமாறு:-

"ஏனற் கதிர் போ விலங்கு
வெண்மலர்கள்
விரிதருஞ் சினைகளை மேவு
மருதடி
போற்றிட வமரரும்
வீற்றிருந்தருளும்
மதமா முகத்தொருவான்
பெருங்கடவுளே!"

நாவலர் பெருமானின் சீடராகிய ம. க. வேற்பிள்ளை அவர்கள் இயற்றிய ஈழமண்டல சதகத்தில் விநாயகப் பெருமான் புகழ் இவ்வாறு பரவப்படுகிறது:-

"மருதடி விநாயகன் மானியம்
பதிவாசி,
மறை முதலெழுத்து ருமிறை
மதகய மூகற் செற்ற மூலவா
தார முதன்,
மா பாரதம் பொறித் தெங்
கருதடிந் திடு கடவுளவ்வை
கயிலையினுறக்
கடி துய்த்து விடுகணபதி,
கருதினவர் கருதாதவர்க்கு
நன் மை கடைமை
காட்டும் விக்கின கருத்தா,
அருவடிவ மாமல னேழை
யேன் பிழைபொறுத்
தருடருங் கருணைக்கட,
லம்புயன் முதலோரு மறியாத
தத்துவ
னளப்பரிய வாந்தரங்கன்
சருவெடுது துய்த்தோர் புன்
மரமாகி யிங்குளேன்
சாந்த நாயகி சமேத
சந்த்ர மௌ லீசனே யைந்
தொழில் விலாசனே
சந்த்ர புர தல வாசனே."

(இங்கு மார்ச் 28 ந் திகதி கொடி விழா ஆரம்பமாகிவிட்டது. தேர்மகோற்சவம் ஏப்ரல் 13 ம் திகதி நடைபெறும்.)

# கூப்பன் புத்தக மோசடி

கொழும்பு, சனி

கொம்பனித்தெரு பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனையின் பலனாக, கிராண்ட்பாஸிலுள்ள ஒரு வீட்டிலிருந்து 160 அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக அந்த வீட்டிலுள்ள ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## இளைஞன் தற்கொலை

உடுப்பிட்டி, சனி

கப்பூது அந்தணந்திடலைச் சேர்ந்த 22 வயதுள்ள இ. கந்தசாமி என்னும் இளைஞன் நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார். மரண விசாரணை நடத்திய இப்பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

கிரிக்கெட்

## ஹாட்லிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி 36 ரன்களால் மத்திய கல்லூரியை வெற்றி பெற்றது.

இப்போட்டியில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பற்குணராஜா 63 ரன்கள் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

## நீச்சல் வீரர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட முதலாவது பெண்மணி அசிவின் டயஸே.

பாக்கு நீரிணையை திரு. மு. நவரத்தினசாமி 27 மணி நேரத்திலும், திரு. ஆனந்தன் 42மணி நேரத்திலும் வல்வெட்டித்துறையிலிருந்து கோடிக்கரைக்கு நீந்திக் கடந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோடிக்கரையிலிருந்து வல்வெட்டித்துறைக்குமுதன்முறையாகஇக்கோஷ்டியினரே நீந்துகின்றனர்.

## இளைஞர்களுக்கு காணித்திட்டம்

கொழும்பு, சனி

வேலையில்லாமலிருக்கும் இளைஞர்களுக்கு காணிகளை வழங்கும் பொருட்டு, காணிக் கச்சேரிகளை நடத்துமாறு நாட்டிலுள்ள பல அரசாங்க அதிபர்களையும் காணிக்கமிஷனர் கேட்டுள்ளார்.

தெரிவுசெய்யப்படும் இளைஞர்களுக்கு நெற்காணிநிலமும் மேட்டுநிலமும் வழங்கப்படும். காணிகளைத் திருத்தி அமைப்பதற்கும் மேட்டுநிலங்களில் காடுகளை வெட்டுவதற்கும் அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் பணம் வழங்கப்படும். நெற்காணி நிலத்தில் வாடி கட்டுவதற்கும் வீடுகட்டுவதற்கும் அரசாங்கம் மானியம் வழங்கும். இத்திட்டம் ஜூலை மாதம் அமுலாகும்.

## சைக்கிள் ஓட்டப்போட்டி

உடுப்பிட்டி, சனி

வடகருணை வளர்மதி விளையாட்டுக் கழகத்தினரால் எதிர்வரும்வெள்ளிக்கிழமை 15மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியொன்று நடத்தப்படவிருக்கிறது.

இப்போட்டிக்கு யாழ்ப்பாண உதவிப்பொலிஸ் அதிபர் திரு. வி. கே. ஆறுமுகம் தலைமை வகிப்பார், பருத்தித்துறை பொலிஸ் அதிபர் திரு. எஸ். அடைக்கலமுத்து இப்போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்குவார்.

## சீன அபாயம்: அமெரிக்க-பாரத யோசனை

வாஷிங்டன், ஏப். 4

சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கும் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள சீன அபாயம்பற்றி இங்குஆலோசனை நடத்துவார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.